කොම්පියුටර් වර්ල්ඩ්

COMPUTER WORLD

செப்டம்பர் 15 –29 –2001

# கம்பியூட்டர் வேர்ல்ட்



ஆசிரியர்: வே. ரவிமோகன்

Rs. 15/-

# BUY A COMPUTER

*and*

## *get a* FREE MOBILE PHONE



### MIRACLE COMPUTER SYSTEM

With
INTEL PENTIUM 111 733.
64MB SD RAM, 20GB,
8MB VGA. 14" PHILIPS MONITOR
MOUSE, KEYBOARD,52X CD ROM,
600W SPEAKERS.56K MODEM, ETC.

**FREE**



**FREE**

**FREE**

**A MOBILE PHONE CONNECTED TO DIALOG GSM WITH EVERY COMPUTER PURCHASED. HURRY! OR YOU WILL LOSE THIS GREAT OPPORTUNITY TO OWN A MIRACLE COMPUTER SYSTEM**

**Also available : Wide Range of Mobile Phones with Dialog GSM Connection and Computers of higher and lower configurations, Peripherals, Acces sories, etc. at very attractive prices!**

## MIRACLE COMPUTERS & CELLULAR SERVICES

NO.2, MUGALAN ROAD, KIRULAPONE, COLOMBO 06.
TEL : 074-512618/9. 077-381887. FAX : 81688
E-mail : miracle@mail.cwisl.net

Office Copy







பிட் : 01 பைட் : 02

5

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எனத் தமிழ் பொங்கிப் புது வெள்ளமாய் ஓடும் இக் கால கட்டத்துக்கு ஏற்ப இன்டர்நெட்டிலும் தமிழ் மட்டுமல்ல தமிழ் மின்னிதழ் களும் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றது !!!

## இன்டர்நெட்டில் வெளியாகும் தமிழ் மின் இதழ்கள்


| | |
|---|---|
| எடுத்துச்செல்லக்கூடிய மெமரி கார்ட் | 3 |
| இன்டர்நெட்டில் வெளியாகும் தமிழ் மின் இதழ்கள் | 5 |
| வயர்லெஸ் இன்டர்நெட் | 7 |
| பதிப்பகத்துறையுடன் கைகுலுக்கும் தமிழ் டிரிபி சொ:.ப்ட்வெயர்கள் | 8 |
| விண்டோஸைப் பயன்படுத்தும் போது.. | 9 |
| கணினித் துணுக்குகள் | 10 |
| எச்ரிஎம்எல்லில் பயன்படுத்தப்படும் சில குறிப்புக்கள் | 11 |
| இ.மெயிலைப் பயன்படுத்துவது எப்படி? | 13 |
| டிரிபி தொடர் -2 | 15 |
| வியத்தகு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் | 17 |
| விதவித பிரிண்டர்கள் வெவ்வேறு வகைகளில் | 19 |
| வாசகர் கணைகள் | 20 |
| இன்டர்நெட் எக்ஸ்புளோரர் - மேலும் சில குறிப்புக்கள் | 21 |
| ஹெல்ப் தொகுப்பைப் பயன்படுத்துவது எப்படி? | 22 |
| பிரபலமாகும் தமிழ் மென்பொருட்கள் | 23 |
| கேள்வி - பதில் | 24 |

தொடர்புகளுக்கு :
கம்பியூட்டர் வேர்ல்ட்
417/2, காலி வீதி,
கொழும்பு - 03,
இலங்கை.

23

"கணினியில் விளையாடு பாப்பா
கொஞ்சம் அறிவோடு விளையாடு பாப்பா
உன் தாய்மொழியோடு விளையாடு பாப்பா
இதைத் தரணிக்கு எடுத்துச் சொல்லடி பாப்பா"

என்று ஓர் புதிய பாப்பாப் பாட்டையே பாடியிருப்பான் அந்த மீசைக்கவிஞன் இன்றிருந்தால்...

## பிரபலமாகும் தமிழ் மென்பொருட்கள்



## ஆசிரியர் இதயத்திலிருந்து...

எமது முதலாவது இதழுக்கு கிடைத்த வரவேற்பு எம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. வாசகர்களாகிய உங்கள் எதிர்பார்ப்பே "கம்பியூட்டர் வேர்ல்ட்" இன் மலர்வு.

எதையாவது சாதித்திட வேண்டும் எழுதிட வேண்டும் என்பதற்காக எழுது பவர்கள் பலர். இதைத்தான் எழுத வேண்டும், இன்றைய சமுதாயத்துக்கு இது மிக அவசியம் என்று எண்ணு பவர்களும், எழுதுபவர்களும் தான் எமது "ஆசிரியர் குழாம்".

பத்து வருடப் பத்திரிகை அனு பவங்களில் நாம் கண்டதும் அதுதான். ஆயிரக்கணக்கான வாசகர்கள் எம்மை அன்போடு பாராட்டி எழுதும் கடிதங்கள் தான் எமக்கு சிம்ம சொப்பனம்.

கணினியுலகில் புதிதாக நடைபோட வந்துள்ள எமது புதிய சஞ்சிகைக்கு கிடைத்துள்ள இந்த அரவணைப்புகள் அசைக்க முடியாத தூண்கள்.

கணினிக்காக இருவாரப் பத்திரிகை யொன்றை ஆரம்பிக்கப் போகின்றோம் என்ற போது இது உங்களால் முடி யுமா என்றவர்களுக்கெல்லாம் சாவு மணி அடித்தது போல குறிப்பிட்ட திகதிகளில் மலர்கிறது "கம்பியூட்டர் வேர்ல்ட்".

தொடர்ந்தும் அவ்வாறே வெளி வரும்.

"கம்பியூட்டர் வேர்ல்ட்" இன் வளர்ச்சிக்கு உங்களின் ஆதரவும், பங்களிப்பும் என்றும் அவசியமாகும்.


நன்றி.

அன்புடன்,

**வே. நவமோகன்**

**பிரதம ஆசிரியர்**

# கையடக்கக் கருவிகளுக்கான புதிய கீ போர்ட்



கையடக்கக் கருவிகள் நாள் தோறும் புதிது புதிதாக உரு வாகிக் கொண்டிருந்தாலும், அவற்றில் தரவுகளை உட்செலுத் துவது இலகுவான விடயமாகக் காணப்படவில்லை. எவ்வளவு தான் கைக்கு அடக்கமாக, சிறிய தாக, எடுத்துச் செல்லக்கூடிய தாகக் காணப்பட்டாலும் தகவல் களை உட்செலுத்தும் வசதி இக் கருவிகளின் ஒரு குறைபாடாகத் தான் விளங்கியது.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண, ஈதர்ஏஜ் (EtherAge) நிறுவனம் சிந்தித்தது. விளைவு?

மிகவும் சிறியதான கையடக் கக் கருவிகளின் கீழ்ப்பகுதியில் பொருத்திப் பயன்படுத்தப்படக் கூடியதாக கீபோர்ட் ஒன்றை வடி வமைத்து வெளியிட்டுள்ளது.

கிளிப்கீ (Clip kee) என்ற பெய ருடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த கீபோர்ட் உள்ளங்கை கம்பி யூட்டர்கள் (Palm PC) மற்றும் பொக் கற் பீசி (Pocket PC) ஆகியவற்றில் பயன்படுத்தப்படக் கூடியது.

முதலாவது பதிப்பாக வெளியி டப்பட்டுள்ள 'கிளிப்கீ', குவார் ட்டி (QWERTY) அடிப்படையிலான கீபோர்ட் போன்றே உருவாக்கப் பட்டுள்ளது. கையடக்கக் கருவி களில் உள்ள எந்தவொரு அப்ளி கேஷனிலிருந்தும் ரைப் செய்தல், எடிட் செய்தல் போன்றவற்றை இந்தக் 'கிளிப்கீ' கீபோர்ட் இலகு வாக்குகின்றது.

# IPAQ H3135 பொக்கற் பீசி



படத்தில் காணப்படுவது கொம் பெக் (Compaq) நிறுவனத்தின் தயாரிப்பான IPAQ H3135 என்ற பெயருடைய பொக்கற் பீசி (Pocket PC) ஆகும். 206 MHz ஐயுடைய புரொஸஸர் (Processor), 16 மெகா பைட் ரம் (RAM), 16 மெகாபைட் ரொம் (ROM), யூஎஸ்பி போர்ட் (USB Port) இணைப்பு போன்ற வற்றைக் கொண்ட இந்த பொக் கற் பீசியின் மூலம் வெப் (Web) அடிப்படையிலான டிஜிட்டல் ஓடியோ பாடல்களைக் கேட்க முடியும். அதுமட்டுமா? நீங்கள் எங்கு போனாலும், எந்த நேரம் என்றாலும் டெஸ்க்ரொப் கம்பி யூட்டருடன் இந்தப் பொக்கற் பீசி யை இணைத்து உங்களுக்கு வந் துள்ள இ-மெயில்களைப் பார்வை யிட முடியும். அத்துடன் குரல்வழி செய்திகளைப் பதிவு செய்து கொள்ளக்கூடிய வசதியும் இதி லுள்ளது.

மிகவும் குறைந்த நிறையைக் கொண்ட இந்தப் பொக்கற் பீசி யில், மென்மையாக வடிவமைக் கப்பட்ட கீபோர்டும், கையெழுத்தை அறியும் வசதியும் விசேட அம்சங் களாகக் காணப்படுகின்றன. இவை தகவல்களைப் பதிவு செய்வதை யும், கையாளுவதையும் இலகு வாக்குகின்றன.

இதன் விலை 400 அமெரிக்க டொலர்களாகும்.

வெளியீடு :
மிலேனியம் அட்வர்டைசிங் அன்ட் பிரிண்டர்ஸ்,
417/2, காலி வீதி,
கொழும்பு - 03.
Telefax 074 - 710279

வடிவமைப்பு :
வெப் இன்டர்நஷனல்,
7/3, ரூபன் பீரிஸ் மாவத்தை,
களுபோவில,
தெஹிவளை.
Mobile 078 - 666608

# எடுத்துச் செல்லக்கூடிய மெமறி கார்ட்







இன்றைய அதிவேகத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிப் பாதையில் எம்பி3 பிளேயர் (MP3 Player), டிஜிட்டல் கமெரா (Digital Camera), பீடிஏ (PDA - Personal Digital Assistant) போன்ற கையடக்கக் கருவிகள் பல்கிப் பெருகி வருகின்றன.

தகவல்களைச் சேமித்து வைப்பதற்காக ஹார்ட் டிஸ்க் (Hard disk) எனும் தகவல் சேமிப்புக் கருவி கம்பியூட்டரின் உள்ளேயே பொருத்தப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, இந்தக் கையடக்கக் கருவிகளுக்கு ஏற்றதான கையடக்க ஹார்ட் டிஸ்க் தேவைப்படும் பட்சத்தில் அதற்கான ஒரு தீர்வு தான் இலகுவில் தூக்கிச் செல்லக் கூடிய மெமறி கார்ட் ஆகும்.



படம் 1

பனசொனிக் கொன்சியூமர் (Panasonic consumer) நிறுவனத்தின் தயாரிப்பான, அணிந்து செல்லக் கூடிய ஓடியோ பிளேயர் ஒன்றையே இத்தகைய ஃபிளாஷ் (Flash) மெமறி கார்ட்டுடன் படம் 1 இல் காண்கிறீர்கள்.

1999 ஆம் ஆண்டில் இவ்வகையான ஃபிளாஷ் மெமறி கார்ட்களைப் பயன்படுத்தும் 20 மில்லியன் கையடக்கக் கருவிகள் பயன்பாட்டில் இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த ஃபிளாஷ் மெமறி கார்ட்டானது ஸ்மார்ட் மீடியா கார்ட் (Smart Media Card), கொம்பெக்ட் ஃபிளாஷ் கார்ட் (Compact Flash Card), மெமறி ஸ்ரிக் கார்ட் (Memory Stick Card) எனப் பல வகைகளில் பயன்படுத்தப்படுகின்றது.

இதேவேளை ஏறத்தாழ 70 மில்லியன் பீடிஏ (PDA) க்கள், லப்ரொப் (Laptop) கம்பியூட்டர்கள் போன்ற கையடக்கக் கருவிகளில் இந்த ஃபிளாஷ் மெமறி கார்ட்கள் அகற்றப்பட முடியாமல் நிரந்தரமாகவே உள்ளே பொருத்தப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன.

1992 இல் முதன் முதலாக, அகற்றப்படக்கூடிய ஃபிளாஷ் ட்ரைவ் (Flash Drive) ஐ அமெரிக்காவிலுள்ள ஸான் டிஸ்க் (San Disk) நிறுவனம் அறிமுகப்படுத்தியது (படம் 2).

ஃபிளாஷ் மெமறி கார்ட்கள் பூட் அப் (Boot - up), பூட் டவுண் (Boot down) என நேரத்தை வீணடிக்காது விரைவாக இயங்கக்கூடியன. இதனால் வேகமாகப் படங்களைப் பெறுவதற்கும் ஓடியோ ஃபைல்களைப் பரிமாறுவதற்கும் இது சிறந்ததாகும். மேலும், இந்த ஃபிளாஷ் கார்ட்கள் இரைச்சல் அற்றவையுமாகும்.

மற்சுஷிதா (Matsushita) என்ற நிறுவனத்தினர் அண்மையில் நடத்திய ஆய்வின் மூலம் தங்களின் SD மெமறி கார்ட்டானது 10 வருடங்களாக எத்தகைய தகவல் இழப்புமற்றுச் செயற்படக் கூடியது என உறுதிப்படுத்தியுள்ளனர்.

பு. செந்தில்ரூபன் AMABE (UK)
மொரட்டுவப் பல்கலைக்கழகம்

சாதாரணமாக 5 வகையான ஃபிளாஷ் கார்ட்களும், 2 வகையான பீசி (PC) கார்ட்களும் உள்ளன. ஃபிளாஷ் கார்ட்களில் கொம்பெக்ட் ஃபிளாஷ் (Compact Flash), மல்ரி மீடியா (Multimedia), ஸ்மார்ட் மீடியா (Smartmedia) என்னும் 3 வகையான கார்ட்கள் பொதுவாக டிஜிட்டல் கமெரா, மியூசிக் பிளேயர், செலூலர் தொலைபேசிகள், பீடிஏ போன்றவற்றில் பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய இரண்டில் மெமறி ஸ்ரிக் (Memory Stick) ஆனது சொனி (Sony) நிறுவனத்தின் கையடக்கக் கருவிகளில் பயன்படுத்தப்படுகின்றது. அடுத்த எஸ்டி (SD) மெமறிக்கார்ட் அண்மையிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

பீசி கார்ட் (PC Card) பொது


வாக லப்ரொப் கம்பியூட்டரிலேயே பயன்படுத்தப்படுகின்றது.

படம் 2 இல் டிஜிட்டல் கமெரா



படம் 2


வில் பயன்படும் மெமறிக் கார்ட்டைக் காண்கிறீர்கள். கம்பியூட்டர் துறையில் பல்கி பெருகி வரும் கையடக்கக் கருவிகளின் தேவை காரணமாக ஃபிளாஷ் மெமறிக் கார்ட்கள் சந்தையில் முக்கிய இடத்தைப் பிடிக்கப் போகின்றது.



படம் 3

உலகளாவிய ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று, 1998ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கிடையில் மெமறிக் கார்ட்களின் பயன்பாட்டு வீதத்தை படம் 3 இல் உள்ளவாறு வரைபுபடுத்தியுள்ளது.

## வைரஸ் சோதனை ???



# புளூருத் தொழில்நுட்பம்



கடந்த பத்தாண்டுகளில் மொபைல் கம்பியூட்டர் தொழில்நுட்பமும் தொடர்பாடற் கருவிகளும் மிகவும் முக்கியத்துவமடைந்து விட்டன. இந்தக் கருவிகளின் விலை உயர்வாக இருப்பதுடன் இவற்றின் அளவு இலகுவில் எடுத்துச் செல்லக்கூடிய விதத்தில் சிறிதாகவும் காணப்படுகின்றது.

இந்த கையடக்கக் கருவிகளானது, மொபைல் கம்பியூட்டர் (Mobile Computer), மொபைல் போன் (Mobile Phone), பேர்சனல் டிஜிட்டல் அசிஸ்டன்ட் (Personal Digital Assistant - PDA) போன்ற பல வடிவங்களில் இலகுவில் எடுத்துச் செல்லக்கூடிய விதத்தில் வெளி வந்துள்ளன.

இன்டெல் நிறுவனம் வயர்லெஸ் மொபைல் கம்பியூட்டர்களைத் தயாரிப்பதற்கு புளூருத் (Bluetooth) என்ற வயர்லெஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது.

மொபைல் கம்பியூட்டர்கள், மொபைல் போன்கள் போன்ற வேறுபட்ட கருவிகளுக்கு இடையில் வயர்கள், கேபிள்கள் எதுவுமின்றி வேகமாகவும், பாதுகாப்பாகவும் தகவல்களைப் பரிமாறும் ஒரு தொழில்நுட்பமே புளூருத் தொழில்நுட்பம் எனப்படுகின்றது.


இத்தொழில்நுட்பம் மூலம் கம்பியூட்டர் கருவிகளுக்கிடையில் 10m எல்லைக்குள் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளமுடியும். உதாரணமாக, உங்கள் கம்பியூட்டரிலிருந்து எம்பி 3 பாடல்களை கம்பியூட்டருடன் எதுவித இணைப்பும் கொண்டிராத எம்பி 3 பிளேயருக்கு மாற்றிக் கொள்ள முடியும்.

மேலுள்ள படத்தில் காணப்படுவது இத்தகைய புளூருத் வயர்லெஸ் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் ஒரு லப்ரொப் கம்பியூட்டராகும்.

## அறிமுகம்

# ஜாவா புரோகிராமிங் ரூல்


ஓம்னிகோர் (Omnicore) சொஃப்ட்வெயர் நிறுவனம் ஜாவா புரோகிராமிங் ரூல் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது. கோட் கைட் 3.0 புரொஃபஷனல் (Code Guide 3.0 Professional) எனும் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இப்புரோகிராமானது விண்டோஸ் (Windows), லினக்ஸ் (Linux), சொலரிஸ் (Solaris) போன்ற ஒப்பரேட்டிங் சிஸ்ரங்களில் பயன்படுத்தப்படக்கூடியது. இது ஜாவா செர்வ்லெட் (Java servlet), ஜேஎஸ்பி (JSP) புரோகிராமிங் வேலைகளைச் செய்யக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை இதிலுள்ள சிறப்பம்சமாகும். இந்த ஜாவா புரோகிராமிங் ரூலை ஜேடிகே (JDK) 1.1, 1.2 அல்லது 1.3 பதிப்புக்களில் பயன்படுத்தலாம். பொதுவாக ஜாவா புரோகிராமிங் எடிட்டர்கள் ஜாவா அப்ளிகேஷன், அப்லெட் புரோகிராமிங் அம்சங்களை மட்டும் செய்யக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



இது பற்றிய மேலதிக விபரங்களுக்கான வெப்தள முகவரி:
http://www.omnicore.com

- ரூபன்

# இன்டர்நெட்டில் வெளியாகும் தமிழ் மின் இதழ்கள்




படம் 2

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் பொங்கிப் புதுவெள்ளமாய் ஓடும் இக்காலகட்டத்துக்கு ஏற்ப இன்டர்நெட்டிலும் தமிழ் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றது.

ஆங்கிலம் இன்டர்நெட்டை முற்றுமுழுதாக ஆட்சி செய்ததால் ஆங்கிலத்தில் புலமையில்லாத தமிழர்களைக் கருத்திற் கொண்டும், தம் தாய்மொழி மீது கொண்ட பற்றினாலும் தமிழ் ஆர்வலர்கள் இன்டர்நெட்டில் தமிழைப் புகுத்துவதற்கு முயற்சிகளை எடுத்து வருகின்றனர். இதனால், இன்று தமிழில் ஏராளமான வெப்தளங்கள் (Web sites) பெருகியுள்ளன.

இவ்வாறு தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் வெப்தளங்களில் பெரும்பாலானவை மின் இதழ்கள் (E-Zines) ஆகவே காணப்படுகின்றன.

தமிழில் முதலில் தோன்றிய மின் - இதழாகவும் மிகவும் அதிகமானோரால் படிக்கப்படும் மின் இதழாகவும் விளங்குவது தமிழ் சினிமா.கொம் (tamilcinema.com) என்ற மின் இதழாகும். இது 1997 இல் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது. ஒரு மாதாந்த மின் இதழான தமிழ் சினிமாவில், முற்று முழுதாக சினிமா பற்றிய செய்திகள் மட்டுமின்றி, பல்வேறு விடயங்களும் இடம்பெறுகின்றன. சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், தொடர்கதைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனம் போன்றவற்றுடன் தமிழ் நூல்களின் பட்டியல், சிறந்த நூல்கள், எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் பற்றிய விடயங்கள் போன்ற தகவல்கள் இத்தளத்தில் கிடைக்கும். இதன் வெப்தள முகவரி www.tamilcinema.com ஆகும் (படம் 1).




படம் 1

நிஜவுலகில் சினிமா என்பது மக்களைத் தன்பால் கவர்ந்திழுப்பதைப் போன்றே, ஒரு மாய உலகமாக விளங்கும் இன்டர்நெட்டிலும் சினிமாவே முதன்மை வகிப்பதை இதன் மூலம் காணக் கூடியதாகவுள்ளது.

தமிழில் மிக அதிகமான மின் இதழ்களை நடாத்தி வரும் நிறுவனமாக இன்று இன்தாம் (Intamm) விளங்குகிறது.

உலகத்தமிழர்களை ஊக்குவிக்கும் இயக்கம் (International Tamil Motivation Movement) என்பதே இதன் விரிவாக்கமாகும்.

இந்தியாவின் சென்னையில் இயங்கி வரும் இந்நிறுவனம் 16 மின் இதழ்களை இன்டர்நெட்டில் வெளியிடுகிறது.

www.intamm.com என்ற இந்நிறுவனத்தின் வெப்தள முகவரியில் நுழைந்தால் (படம் 2) அதன் ஹோம் பேஜ் (Home Page) இல் INTAMM's Magazine என்று காணப்படும் இடத்தில் இன்தாமினால் வெளியிடப்படும் மின்

இதழ்களின் பெயர்கள் காணப் படும். அவை ஒவ்வொன்றிலும் கிளிக் செய்வதன் மூலம் அந்தந்த மின் இதழ்களைப் பார்வையிட முடியும்.

இன்தாமால் வெளியிடப்படும் ஏனைய மின் இதழ்களின் விபரங் கள் வருமாறு:

- வானவில் (Vanavil) - கலை, இலக்கியம் தொடர் பான இதழ்.
- பனித்துளி (Panithuli) - இளையவர்களுக்கான வார இதழ்.
- ஒளியோவியம் (Olioviyam) - சினிமா வார இதழ்.
- சென்னைச் சுவர்கள் (Chennai Suvargal) - சென்னைச் சுவரொட்டிகள் வார இதழ்.
- ஏற்றுமதி உலகம் (Ettrumathi Ulagam)- ஏற்றுமதி போன்ற விபரங்க ளைத் தெரிவிக்கும் வணிக இதழ்.
- தமிழ் கம்பியூட்டர் (Tamil Computer) - தகவல் தொழில்நுட்பம் தொடர்பான முதலாவது தமிழ் இதழ்.
- மருத்துவ அறிவியல் மலர் (Maruthuva Ariviyal Malar)- மருத்துவம் தொடர்பான தமிழ் இதழ்.
- மனித நேயம் (Manitha Neyam)- மனித நேயத்துக்கான வார இதழ்.
- பூவுலகு (Poovulagu) - விழிப்புணர்ச்சி தொடர்பான இதழ்.
- மூலிகை மணி (Mooligai Mani)- மூலிகையியல் தொடர்பான இதழ்.
- மியூசிக் வேர்ல்ட் (Music World) - தமிழ் இசை தொடர்பான இதழ்.
- முல்லை (Mullai) - பெண்களுக்கான இதழ்.
- வளர் தொழில் (Valar Thozhil)- வர்த்தகம் தொடர்பான முதலாவது தமிழ் இதழ்.
- சரிகமபதநி (Sarigamapa-thani) - கீழைத்தேய இசை தொடர் பான இதழ்.
- நவீன வேளாண்மை (Naveena Velanmai) - விவசாயத்துறை தொடர்பான இதழ்.
- துளிர் (Thulir) - குழந்தைகளுக்கான இதழ்.

தமிழ் மின் இதழ்களில் சிறந் ததாக அம்பலம் மின் இதழைக் குறிப்பிடுகின்றனர்.

இலக்கியம், சினிமா, கிரிக் கெட், கலை, சமையல், விளை யாட்டு, கவிதை, கட்டுரை போன்ற 14 தலைப்புக்களின் கீழ் அம்பலத் தில் தகவல்கள் கிடைக்கின்றன. அம்பலத்தின் ஆலோசகராக கணினித்துறையில் சிறந்த எழுத் தாளராக விளங்கும் இந்திய எழுத் தாளரான சுஜாதா விளங்குவது குறிப்பிடத்தக்கது.

பாரதியார், பாரதிதாசன் போன் றோரின் கவிதைகளைத் தன்ன கத்தே கொண்ட இந்த மின் இதழை மாதாந்தம் 20 இலட்சம் பேர் படிப்பதாகக் கூறப்படுகிறது. அம்பலம் மின் இதழை www. ambalam.com என்ற முகவரியூடா கப் பார்வையிட முடியும்.

அடுத்துக் குறிப்பிட்டுச் சொல் லக் கூடிய தமிழ் மின் இதழாக விளங்குவது ஆறாம்திணை ஆகும். 1998 டிசம்பரில் ஆரம்பிக் கப்பட்ட இந்த இதழ் தினசரிப் பத்திரிகை, வார இதழ் மற்றும் இலக்கியச் சஞ்சிகை ஆகிய மூன் றினது தன்மைகளையும் ஒருங்கே கொண்டு வெளியாகிறது. எம். அப்பண்ணாசாமியை ஆசி ரியராகக் கொண்டு வெளியாகும் இந்த இதழின் வெப்தள முகவரி www.aaramthinai.com என்பதாகும்.

அடுத்தது 'தமிழ் ஒன்லைன்' என்ற மின் இதழ் ஆகும். இதில் இந்தியா மற்றும் தமிழ் மக்கள் வாழும் ஏனைய பகுதிகள் தொடர் பான பிந்திய செய்திகள், கலை, இலக்கியச் செய்திகள் போன்றவற் றைக் காணமுடியும். 'தமிழ் ஒன் லைன்' மின் இதழின் வெப்தள முகவரி www.tamilonline.net என்ப தாகும்.

'பதிவுகள்' என்ற மின் இதழ் ஒன்றை உலகமெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்காக, கனடாவில் வாழும் தமிழ் எழுத் தாளரான வி. என். கிரிதரன் மாதாந்தம் வெளியிட்டு வருகிறார். இதன் வெப்தள முகவரி www. pathivukal.com என்பதாகும்.

மேலும் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்காக இன்டர்நெட்டில் வெளியாகும் முதல் பன்னாட்டு பல்சுவைத் தமிழ் இதழாக 'தமிழ்ச் சோலை' விளங்குகிறது. டாக்டர் வ. ஜெயதேவனை சிறப்பா சிரியராகக் கொண்டு வெளிவரும் இந்த இதழ் சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்கு, திரைப்படம், அழகுக்குறிப்பு, சமையல் குறிப்பு போன்ற பல அம்சங்களுடன் மாதம் இரு முறை மலர்கின்றது. www. indiaplus. com/cholai/index. shtml என்ற வெப்தள முகவரியில் இவ்விதழைப் பார்வையிடலாம்.

இவை போன்ற ஏராளமான தமிழ் வெப்தளங்கள் புதிது புதி தாக வெளிவந்து கொண்டிருக் கின்றன.

இவ்வாறு தமிழ் வெப்தளங்கள் பெருகி வருவதில் சொந்த நாடு களை விட்டுப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களே பெரும் பங் காற்றி வருகின்றனர். "மெல்லத் தமிழினிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும்" என்று வேதனையுற்றுப் பாடிய பாரதி மட்டும் இன்றிருந்தால் இன் டர்நெட்டில் தமிழின் வளர்ச்சிப் பிரவாகம் கண்டு, உள்ளம் குளிர்ந் தொரு புதுப்பாடலே புனைந்தி ருப்பான்.

- சாகித்யா

# வயர்லெஸ் இன்டர்நெட்




- பு. செந்தில்ரூபன்
senthilruban@computer.org


இன்றைய உலகில் இளையோர் முதல் முதியோர் வரை உச்சரிக்கும் வார்த்தைகள் இன்டர்நெட், இ-மெயில் என்பன தான். சாதாரணமாக கம்பியூட்டர்களில் இன்டர்நெட், இ-மெயில் உபயோகித்துச் சலித்துப் போன கம்பியூட்டர் பொறியியலாளர்கள் இன்று கையடக்கக்கருவிகளுக்கு இவற்றைக் கொண்டு வந்துள்ளனர். இதற்கான கருவிகளை வடிவமைப்பதில் மொட்டோறோலா (Motorola), நோக்கியா (Nokia), சீமென்ஸ் (Siemens) எனும் நிறுவனங்கள் இறங்கியுள்ளன. இவ்வேளையில் அவற்றுக்கான சொ∴ப்ட்வெயர் புரோகிராமிங் வேலையை மைக்ரோசொ∴ப்ட் (Microsoft), பாம் (Palm), சிம்பியன் (Symbian) போன்ற நிறுவனங்கள் மேற் கொண்டுவருகின்றன. இதேநேரம் ஓப்பின்வேவ் (Openwave), நோக்கியா (Nokia), எரிக்ஸன் (Ericsson) நிறுவனங்கள் பொதுவாக WAP (Wireless Application Protocol) போன்ற தொழில்நுட்பங்களை உருவாக்கி யுள்ளன.

சாதாரணமாகப் பாவனையிலுள்ள கையடக்கத் தொலைபேசிகளை 1G (analog), 2G (digital) எனப் பிரிக்கலாம். இப்போது GSM தொழில்நுட்பமே பெரிதும் பயன்பாட்டில் உள்ளது. இந்த 2G நெற்வேர்க், தகவல் பரிமாற்றத்தை (Data rate) 14.4 kbps அல்லது அதற்குக் குறைவாகவே கையாளக்கூடியன. தற்போது புதிதாக அறிமுகமாகி வரும் 3G கருவிகள் சாதாரணமாக பத்தின் மடங்கிலிருந்து நூறின் மடங்கிலான kbps தகவல் பரிமாற்று வேகத்தைக் கொண்டுள்ளன. இவை விரைவில் 2Mbps இலக்கை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேநேரம் 2G - 3G கருவிகளுக்கு இடையில் 2.5 G எனப்படும் தரத்தைக் கொண்ட கருவிகளும் பாவனையில் உள்ளன.

இத்தகைய கருவிகளில் அறிமுகப்படுத்தப்படும் இன்டர்நெட், இ-மெயில் வசதிகள் தகவல் பரிமாற்றத்தை விட வேறு பல பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றன. அவையாவன சிறிய திரை, குறைந்தளவு மெமறி, வரையறுக்கப்பட்ட செயற்பாட்டுச்சக்தி, பற்றறிச் சக்தி, நெற்வேர்க் பிரச்சினை போன்றவையாகும். அத்துடன் பொதுவாக இன்டர்நெட்டில் பயன்படும் HTML, HTTP, TCP/IP போன்ற தொழில்நுட்பங்களையும் கருத்திற் கொள்ளவேண்டும்.

## WAP (Wireless Application Protocol)

இது பல்வேறு மொபைல் தொடர்பாடல் நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்டது. சாதாரணமாக, இன்டர்நெட்டில் பயன்படும் HTTP பெருமளவு தகவலைப் பரிமாற்றுவதுடன், அதற்குக் கூடிய பேண்ட் வித் (Band width) உம் தேவைப்படுகின்றது. இதற்குப் பிரதியீடாகவே WAP தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. HTTP க்கு எவ்வாறு HTML பயன்படுத்தப்படுகின்றதோ, அதுபோலவே WAP க்கு WML (Wireless Markup Language) / XML (eXtensible Markup Language) போன்ற மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.




WAP கேற்வே (Gateway) ஆனது TCP/IP க்கும் WAP க்கும் இடைப்பட்ட பாலமாகத் தொழிற்படுகின்றது. இது தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பம். இது WML தவிர XHTML, HDML (Handheld Device Markup Language), Compact HTML போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படக்கூடியது. அத்துடன் இது முழு நிற கிர∴பிக்ஸ், மல்ரிமீடியா (Multimedia) தேவைகளுக்கும் பயன்படுத்தப்படக்கூடியது. இதேநேரம் பாவனையிலுள்ள பல்வேறு வகையான கருவிகளும் பல்வேறு வகைப்பட்ட தொழில்நுட்பங்களும் ஒரு பொதுவான கட்டமைப்புக்குள் வரும் வரை இதன் வளர்ச்சியைப் பெரியளவில் எதிர்பார்ப்பது கடினமாகும்.

இன்டர்நெட்டில் பயன்படுத்தப்படும் மார்க்அப் லங்குவேஜ் (Markup Language) களைப் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

1. **SGML - Standard Generalized Markup Language**

   இதுவே HTML, XML இன் உருவாக்கத்துக்கு அடிப்படையானது.

2. **HTML - Hyper Text Markup Language**

   இது தற்போது பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது.

3. **XML - eXtensible Markup Language**

   இது SGML இல் இருந்து HTML பிரதியீடாக பல்வேறு புரோகிராமிங் தேவைகளைக் கருத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

4. **XHTML - eXtensible Hypertext Markup Language**

   இது XML, HTML இரண்டையும் கொண்டு உருவாக்கப்பட்டது.

5. **XSL - eXtensible Stylesheet Language**

   இதன் மூலம் XML பக்கங்களை பிறவுஸரால் இனங்காணப்படக்கூடிய இன்னொரு மொழி வடிவத்திற்கு மாற்றமுடியும்.

   உதாரணமாக, XML பக்கங்களை HTML பக்கங்களாக மாற்றி அமைக்கமுடியும்.

6. **RML - Relational Markup Language**

   வயர்லெஸ் இன்டர்நெட் தொழில்நுட்பத்தின் குறிப்பிட்ட தேவைகளின் பொருட்டு RML மொழி உருவாக்கப்பட்டது.

7. **WML - Wireless Markup Language**

   இது XML, HTML, phone.com இன் HDML ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்பட்டது.

## பதிப்பகத்துறையுடன் கைகுலுக்கும்

# தமிழ் டிரிபி சொ∴ப்ட்வெயர்கள்

- கணினிதாசன் -

இலங்கையைப் பொறுத்த வரையில் தேசிய மொழிகளான தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் தான் அதிக நூல்கள் வெளிவருகின்றன. எனவே, பேஜ்மேக்கர் போன்ற டிரிபி (DTP) சொ∴ப்ட்வெயர்களைப் பயன்படுத்துபவர்கள் மொழி சொ∴ப்ட்வெயர்களையும் வாங்கிப் பயன்படுத்தலாம்.

தமிழ் மொழியிலான டிரிபி சொ∴ப்ட்வெயர்கள் பல இந்தியாவில் வெளிவந்துள்ளன (அட்டவணை). தமிழில் ரைப்செற்றிங் (Type setting) செய்யக்கூடியதான இவற்றில் பல வசதிகள் காணப்படுகின்றன. உதாரணமாக, தமிழ் மெய் எழுத்துக்களையோ, பெரும்பாலான இகர, ஈகார, ஊகார எழுத்துக்களையோ ரைப் செய்யும் போது, இரண்டு வெவ்வேறு கீக்களை அழுத்த வேண்டிய தேவை உள்ளது.

க+ ˙ = க்
ப+ ി = பி
த+ ீ = தீ
து+ ா = தூ
நு+ ா = நூ

இவ்வாறு இரண்டு வெவ்வேறு கீக்களை அழுத்தியே சாதாரணமாக இன்று பாவனையிலுள்ள பாமினி (Bamini), டபிள்ஏ பாமினி (Baamini), கழகம் (Kalaham), கல்யாணி (Kalyani), ஜெ∴ப்னா (Jaffna), குஷ்பு (Kushpoo), ரவி (Ravi), போன்ற எழுத்துருக்களைப் பயன்படுத்துகின்றோம்.

ஆனால், இந்த தமிழ் டிரிபி சொ∴ப்ட்வெயர்களில் சில, முழுமையான எழுத்துக்களை (Kerning) கொண்டுள்ளன. எனவே, இவ்வாறான எழுத்துக்களைக் கொண்ட சொ∴ப்ட்வெயர்களைப் பயன்படுத்தி இன்ரர் கரெக்ரர் ஸ்பேசிங் (Inter Character Spacing) கொடுக்க முடியும்.

மேலே தரப்பட்டுள்ளது போன்ற முழுமையற்ற (Non Kerning) எழுத்துக்களுக்கு இவ்வாறு இன்ரர் கரெக்ரர் ஸ்பேசிங் கொடுத்தால் க, ப, த என்பன தனித்தனியேயும் ˙, ി, ீ என்பன தனித்தனியேயும் தோற்றமளிக்கும்.

பேஜ்மேக்கரில் ஜெஸ்ரி∴பை (Justify), ∴போர்ஸ் ஜெஸ்ரி∴பை (Force Justify) என்பவற்றைக் கொடுக்கும் போது இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கி இருப்பீர்கள்.

தமிழ் டிரிபி சொ∴ப்ட்வெயர்களுடன் TTF (True Type Fonts), ATM (Adobe Type Manager) என்னும் வகைகளில் ∴பொன்ட்கள் வழங்கப்படுகின்றன. இவற்றில் ATM ∴பொன்ட்களே தமிழைப் பொறுத்த வரையில் தரமானது எனக் கூறப்படுகிறது.

| சொ∴ப்ட்வெயர் பெயர் | நிறுவனம் |
|---|---|
| ஸ்ரீலிப்பி (முரசு) | மொடியூலர் சிஸ்ரம்ஸ் |
| குருதி | பப்ளிக் சொ∴ப்ட்வெயர் லைப்ரரி |
| இண்டிகா | சுமித் ரெக்னாலஜி |
| ஜிஸ்ட் | சிடேக் |
| பிரகாஷக் | சொனட்டா |
| இளங்கோ | கேட்கிரா∴ப்ட் (ஏசிஈஎஸ்) |
| ரங்கோலி | ∴பிப்த் ஜெனரேஷன் |
| இன்ஸ்கிரிப்ட் | சொ∴ப்ட்வியூ கம்பியூட்டர்ஸ் |
| வின்ஸ்கிரிப்ட் | பிஎஸ்சிஸ்ரம் |
| பத்ரிகா | மைக்ரோசென்ஸ் கம்பியூட்டர் |
| இன்டோவெட் | லாஸ்ரெக் |
| வேர்லார்ட் (ஸாப்தாச்னா) | எஸ்.ஆர்.ஜி. |
| மோனோரைப் | மோனோரைப் |
| இன்∴போநெட் | இன்∴போநெட் |

தமிழ் டிரிபி சொ∴ப்ட்வெயர்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் தமது அனுமதி இல்லாது பிறர் திருட்டுத்தனமாக கொப்பி (Copy) செய்வதைத் தடுப்பதற்காக சில பாதுகாப்பு முறைகளைக் கையாள்கிறார்கள். இவற்றில் 3 முக்கிய முறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்

1. கீ டிஸ்கட் (Key Diskette)

இம்முறையில், ஒவ்வொரு தடவையும் சொ∴ப்ட்வெயரை இயக்கும் போது டிஸ்க்கை ட்ரைவினுள் செலுத்த வேண்டும்.

2. ஹார்ட்வெயர் லொக் (Hardware Lock)

இது கம்பியூட்டரில் பொதுவாக பிரிண்டரை இணைக்கின்ற (LPT) பரலல்போர்ட்டில் இணைத்துப் பயன்படுத்தப்படும்.

3. ஹார்ட்வெயர் கார்ட் (Hardware Card)

இது கம்பியூட்டரின் உட்புறத்தில் பொருத்தப்படுகின்ற ஒரு கார்ட் ஆகும். ஒவ்வொரு தனிக் கம்பியூட்டருக்கும் தனிக் கார்ட் போட வேண்டும் என்பதுடன் கம்பியூட்டரை அப்கிரேட் (Upgrade) செய்யும் போது சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியும் வரலாம்.

இந்த தமிழ் டிரிபி சொ∴ப்ட்வெயர்களில் பல வசதிகள் காணப்படினும் இவற்றின் அதிகரித்த விலை, பாதுகாப்பு முறைகள் காரணமாக இவை இலங்கையில் பிரபல்யமாகவில்லை.

இலங்கையில் பத்திரிகை நிறுவனங்கள், பெரிய பதிப்பகங்களில் ஸ்ரீலிப்பி சொ∴ப்ட்வெயர் பயன்பாட்டில் உள்ளது. இவற்றின் கீபோர்ட் அமைப்பு வித்தியாசமானது.

தமிழ் டிரிபி சொ∴ப்ட்வெயர்களை வாங்கும் போது முக்கியமாக நீங்கள் பயன்படுத்தும் ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தில் இயக்கக் கூடியதா என விசாரித்து வாங்க வேண்டும்.

# விண்டோஸைப் பயன்படுத்தும் போது...

கடந்த இதழில் விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தில் காணப்படும் சில அம்சங்கள் பற்றிப் பார்தோம். இந்த இதழில் ஃபைல்களை எவ்வாறு றெஜிஸ்டர் (Register) செய்வது என்பதைப் பார்ப்போம்.

வேர்ட் (Word) இல் ஃபைல் ஒன்றை உருவாக்கி அதை bio என்ற பெயரில் சேவ் (Save) செய்கின்றீர்கள் என வைப்போம். கம்பியூட்டரில் அந்த ஃபைலானது bio.doc என்ற பெயருடன் சேவ் ஆகியிருப்பதைக் காண்பீர்கள். இதில் .doc என்பது எக்ஸ்ரென்ஷன் (Extension) என அழைக்கப்படும்.

இவ்வாறு கம்பியூட்டரில் எக்ஸெல் (Excel), பவர்பொயின்ற் (PowerPoint), அக்ஸெஸ் (Access), பேஜ்மேக்கர் (PageMaker) போன்ற எந்தவொரு அப்ளிகேஷன் மற்றும் புரோகிராம்களில் தொழிற்பட்டாலும் அவற்றில் ஃபைல்களைச் சேவ் செய்யும் போது அந்த ஃபைல்கள் குறிப்பிட்ட அப்ளிகேஷன் அல்லது புரோகிராமிற்குரிய எக்ஸ்ரென்ஷனுடன் சேவ் ஆகும்.

கீழே சில ஃபைல் வகைகளும் அவற்றுக்கான எக்ஸ்ரென்ஷன்களும் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வேர்ட் | .doc |
| எக்ஸெல் | .xls |
| அக்ஸெஸ் | .dbf |
| பவர்பொயின்ற் | .ppt |
| எச்ரிஎம்எல் | .htm /.html |
| சிஸ்ரம் ஃபைல் | .sys |
| ரெக்ஸ்ட் ஃபைல் | .txt |
| கிளிப்போர்ட் | .clp |
| ஹெல்ப் ஃபைல் | .hlp |
| பெச் (Batch) ஃபைல் | .bat |

ஒரு எக்ஸ்ரென்ஷன், எந்த அப்ளிகேஷன் அல்லது புரோகிராமிற்குரியது என்பது விண்டோஸுக்குத் தெரியாது. எனவே, இந்த விபரங்களை விண்டோஸில் பதிவு செய்து கொள்ளுவதையே விண்டோஸில் ஃபைல்களை றெஜிஸ்டர் செய்தல் என்பர்.

உதாரணமாக, விண்டோஸ் எக்ஸ்புளோரரிற் காணப்படும் bio.doc என்ற ஃபைலை டபிள் கிளிக் செய்து ஓப்பின் செய்தால் .doc என்ற எக்ஸ்ரென்ஷனுக்குரிய அப்ளிகேஷன் வேர்ட் என விண்டோஸ் கண்டறிந்து தானாகவே வேர்ட்டை ஓப்பின் செய்து, அதில் குறிப்பிட்ட ஃபைலை ஓப்பின் (Open) செய்யும்.

விண்டோஸ் புதிதாக அப்ளிகேஷன் புரோகிராம்களை இன்ஸ்ரோல் செய்யும் போது அவை தாமாகவே விண்டோஸில் தமக்குரிய எக்ஸ்ரென்ஷன்களைப் பதிவு செய்யும்.

இப்போது ஃபைல் ஒன்றை விண்டோஸில் றெஜிஸ்டர் செய்வது பற்றிப் பார்ப்போம்.


## கணியா

.doc என்ற எக்ஸ்ரென்ஷனையுடைய ஃபைல்களை வேர்ட் அப்ளிகேஷனில் திறக்கச் செய்யாமல் நோட்பேட் (Notepad) என்ற அப்ளிகேஷனில் திறக்கச் செய்ய வேண்டுமெனில் .doc என்ற எக்ஸ்ரென்ஷனுக்குரிய அப்ளிகேஷனை மாற்றிப் பதிவு செய்ய வேண்டும்.

அதற்கு விண்டோஸ் எக்ஸ்புளோரரை ஓப்பின் செய்யுங்கள். அதில் மெயின் மெனு வியூ (View) வில் ஃபோல்டர் ஒப்ஷன்ஸ் (Folder Options) என்பதைக் கிளிக் செய்யுங்கள். டயலொக் பொக்ஸ் ஒன்று தோன்றும்.

அதில் ஃபைல் ரைப்ஸ் (File Types) என்பதைக் கிளிக் செய்யுங்கள் ஃபோல்டர் ஒப்ஷன்ஸ் டயலொக் பொக்ஸ் தோன்றும் (படம் 1).

றெஜிஸ்ட்டேர்ட் ஃபைல் ரைப்ஸ் (Registered File Types) என்பதன் கீழ் விண்டோஸில் பதிவு செய்து கொண்ட ஃபைல் வகைகள் காணப்படும். அதில் வேர்ட் டொக்கியூமென்ட் (Word Document) என்பதை செலெக்ட் செய்து விட்டு, கீழேயுள்ள ஃபைல் ரைப் டீரெய்ல்ஸ் (File type details) என்பதை நோக்கினால் அதில் எக்ஸ்ரென்ஷன்(Extension) என்பதன் அருகில் வேர்ட்டிற்குரிய எக்ஸ்ரென்ஷன் .doc என்பது காணப்படும். ஓப்பின்ஸ் வித் (Opens with) என்பதன் அருகில் காணப்படும் வின்வேர்ட் (WIN WORD) என்பது குறிப்பிட்ட எக்ஸ்ரென்ஷனையுடைய ஃபைல் விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்ரத்தில் வேர்ட் அப்ளிகேஷனுடன் ஓப்பின் ஆக வேண்டும் என்பதைக் குறிக்கிறது.





படம் 1

.doc ஃபைலை நோட்பேட் (Note pad) இல் திறக்கவேண்டுமெனில் அருகிலுள்ள எடிட் (Edit) என்பதைக் கிளிக் செய்யுங்கள். படம் 2 இல் உள்ளவாறு டயலொக் பொக்ஸ் ஒன்று தோன்றும். அதிலுள்ள எடிட் பட்டினைக் கிளிக் செய்யுங்கள். படம் 3 இலுள்ளவாறு டயலொக் பொக்ஸ் ஒன்று தோன்றும்.


அதில் Application Used to perform action என்பதன் கீழ் வேர்ட்டானது அதன் பாத் (Path) உடன் காணப்படும். அருகிலுள்ள

பிறவுஸ் (Browse) பட்டினைக் கிளிக் செய்வதன் மூலம் நோட் பேடிற்குரிய பாத்தைக் கொடுத்த பின் ஒகே (OK) பட்டினைக் கிளிக் செய்யுங்கள். பின் படம் 3, படம் 2 ஆகியவற்றில் காணப்படும் டயலொக் பொக்ஸ்களைக் குளோஸ் செய்யுங்கள்.




படம் 2


இப்போது .doc என்ற எக்ஸ் ரென்ஷனையுடைய ∴பைல்களைத் திறக்கும் போது அவை நோட்பேடில் ஓப்பின் ஆவதைக் காண்பீர்கள்.




படம் 3

அப்ளிகேஷன்கள், புரோகிராம்களை இன்ஸ்ரோல் செய்யும் பொழுது அவை தமக்குரிய எக்ஸ்ரென்ஷன்களைத் தாமாகவே விண்டோஸில் றெஜிஸ்டர் செய்து விடும். எனவே ∴பைல்களை றெஜிஸ்டர் செய்ய வேண்டிய தேவை பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

கட்டுரைகள் கட்டுரையாளர்களது,
கருத்துக்கள் கருத்தாளர்களது,
எழுத்துக்கள் எழுத்தாளர்களது.




**வைரஸ் எதிர்ப்புப் புரோகிராம்கள்**
**(Anti Virus Programs)**

கம்பியூட்டர் ஒன்றில் வைரஸ் உள்ளதா எனச் சோதனை செய்து அவற்றை அழிக்கும் புரோகிராம்கள் இவ்வாறு அழைக்கப்படும்.

**அப்பிள் கம்பியூட்டர்**
**(Apple Computer)**

முதன்முதலாக உருவாக்கப்பட்ட பேர்சனல் கம்பியூட்டர் (Personal Computer) அப்பிள் கம்பியூட்டர் எனப்படும். இதைப் பின்பற்றியே இன்று கம்பியூட்டர் தயாரிப்பில் பிரபல்யம் பெற்று விளங்கும் ஐ.பி.எம். நிறுவனம், கம்பியூட்டர்களை உருவாக்கியது.

**அற்றாச்மெண்ட்**
**(Attachment)**

இ-மெயில் அனுப்பும் போது அதனுடன் இணைத்து அனுப்புகின்ற புகைப்படங்கள் அல்லது வேறு டொக்கியூமென்ட்கள் கொண்ட ∴பைலை இவ்வாறு அழைப்பர்.


**சைபர்ஸ்பேஸ்**
**(Cyberspace)**

கம்பியூட்டரின் உதவியுடன் நடைபெறுகின்ற அனைத்துத் தகவல் தொடர்புச் செயற்பாடுகளையும் இப்படி அழைப்பர்.

இச்சொல்லை முதன் முதலாக வில்லியம் இப்சென் என்ற எழுத்தாளர் பயன்படுத்தினார்.

**இ - கொமர்ஸ்**
**(E - Commerce)**

இன்டர்நெட்டைப் பயன்படுத்தி பொருட்களை விற்றல், வாங்குதல் போன்றவற்றைச் செய்தல்.



**ஹக்கர்**
**(Hacker)**

பிறரின் கம்பியூட்டர் புரோகிராம்களில் அனுமதியின்றி நுழைந்து மாற்றங்களைச் செய்பவர்களை இவ்வாறு அழைப்பர்.

**மல்ரிமீடியா**
**(Multimedia)**

வீடியோ, தொலைபேசித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தித் தகவல் பரிமாற்றம் செய்வதை இப்படிக் குறிப்பர். மல்ரிமீடியாவைப் பயன்படுத்தி இசையைக் கேட்டல், படம் பார்த்தல் போன்றவற்றைச் செய்ய முடியும். 'பல்லூடகம்' எனத் தமிழில் அழைப்பர்.

# எச்ரிஎம்எல்லில் பயன்படுத்தப்படும் சில குறிப்புக்கள் 2

எச்ரிஎம்எல் மூலம் வெப்பேஜ் ஒன்றுக்குப் படங்களைப் போட IMG என்ற குறிப்புப் பயன்படும். எந்தப் படத்தைச் சேர்க்க வேண்டுமோ அந்தப் படத்திற்கான ஃபைலின் (.jpg, .gif) பெயரை IMG என்ற குறிப்பில் SRC என்ற பண்பாகக் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக,

```
<IMG SRC="Filename.jpg">
```

இதில் ஃபைல் நேம் என்பதில் இமேஜ் (Image) இற்கான ஃபைலின் பெயரைக் கொடுக்கலாம். பொதுவாக, இதில் .jpg, .gif வகை ஃபைல்களைப் பயன்படுத்தலாம்.

<IMG SRC= > என்பதில், IMG என்பது இமேஜ் (Image) ஐயும், SRC என்பது சோர்ஸ் (Source) ஐயும் குறிக்கின்றது. சோர்ஸ் என்பதில் படத்திற்கான ஃபைலின் பெயரையும், அது இருக்கின்ற இடத்தையும் (Path) குறிப்பிடுவர்.

உதாரணமாக,

```
<HTML>
<HEAD><TITLE>
This is my first attempt
</TITLE></HEAD>
<BODY>
<H1>My computer</H1>
<IMG SRC="computer.jpg">
</BODY>
</HTML>
```

என்பது படம் 1 இல் உள்ளவாறு தோன்றும்.




படம் 1

இத்துடன் பெரும்பாலும் படங்களுடன் ALT, ALIGN என்ற இரு பண்புகள் குறிப்பிடப்படும்.




படம் 2

ALIGN என்பது, படத்தை இடது பக்கமாக (Left), வலது பக்கமாக (Right), மேலாக (Up), கீழாக (Bottom), அல்லது மத்தியில் (Middle) வைப்பதற்குப் பயன்படும் பண்பாகும்.

இதற்கு, IMG SRC உடன் ALIGN=LEFT / ALIGN=RIGHT / ALIGN=MIDDLE / ALIGN=BOTTOM / ALIGN=UP என்று கொடுக்கவேண்டும்.

உதாரணமாக, முதல் உதாரணத்தில் IMG SRC என்பதில் கீழுள்ளவாறு கொடுத்தால்,

```
<IMG SRC="Computer.jpg"
ALIGN="RIGHT">
<IMG SRC="Computer.jpg"
ALIGN="BOTTOM">
```





படம் 3

அவை முறையே படம் 2, 3 என்பவற்றிலுள்ளவாறு தோன்றும்.

நீங்கள் சேர்க்கும் படங்களின் அளவுகளையும் நிர்ணயிக்க முடியும். இதற்கு HEIGHT, WIDTH என்னும் பண்புகளைக் கொடுக்கலாம். இதை ஒரு உதாரணம் மூலம் பார்ப்போம்.

```
<HTML>
<BODY>
This is Nallur
<IMG SRC="Nallur.jpg">
</BODY>
</HTML>
```

என்பது படம் 4 இல் உள்ளவாறு தான் தோன்றும்.





படம் 4

இதே படத்திற்கு அளவைக் குறிப்பிடும் போது,

```
<IMG SRC="Nallur.jpg"
Height=180 Width=150>
```

எனக் கொடுத்தால் படம் 5 இல்




படம் 5

உள்ளவாறு தோன்றும்.

ALT என்ற பண்பு மூலம் சில வெப்தளங்களில் அந்தப் படங்களுக்குரிய இடங்களில் சொற்கள் தோன்றும்படி செய்திருப்பார்கள். என்ன படம் தோன்றப் போகிறது என்பதைத் தெரிவிப்பதற்காகவே இந்த ஏற்பாடாகும்.

பழைய உலவிகளில் வெப்தளங்களைத் திறந்து பார்க்கும் போது எழுத்துக்களை மட்டுமே வெளியீடாகக் கொடுக்கும். படங்களைக் காட்டாது.

எனவே, ALT பண்பில் எதையும் கொடுக்கவில்லை என்றால் அந்த இடம் அர்த்தமில்லாத வெற்றிடமாகத் தோன்றும்.

இதற்காகவும் ALT என்ற பண்பில் சொற்களைக் கொடுப்பது வழக்கம்.


இந்த ALT பண்பைப் பின்வருமாறு கொடுக்கலாம்.

<IMG SRC="Nallur.jpg" ALT ="Picture of Nallur">

படங்களுக்கு அதிக நினைவகம் தேவையென்பதால் அவற்றைக் கம்பியூட்டருக்குக் கொண்டு வர அதிக நேரமாகும். காத்திருக்கும் நேரத்தினைக் குறைக்க, பல சமயங்களில் படங்களைத் தவிர்த்து மற்றையதைப் பார்ப்பது வழக்கம்.


இவ்வாறு படங்களைத் தவிர்ப்பதற்காக செற்றிங் கொடுக்கப்பட்டிருந்தால், அல்லது பழைய உலவிகளில் இதைப் பார்வையிட்டால் படம் 6 இல் உள்ளவாறு தோன்றும்.

அவ்வேளையில் மொனிட்டரில் படத்திற்குப் பதிலாக ALT (Alternative) என்ற பண்பில் கொடுக்கப்பட்ட ஒரு சொல்லோ அல்லது சொற்றொடரோ மொனிட்டரில் தோன்றும். இதையே படத்துடன் பார்க்கும் போது, அந்தப் படத்தின் மீது மவுஸ் பொயின்ரரை வைத்தால் "Picture of Nallur" என்று தோன்றும்.




படம் 6

இது படம் 7 இல் உள்ளவாறு காட்சியளிக்கும்.





படம் 7

இப்படத்தைச் சுற்றி போடர் (Border) ஐப் போட Border என்ற பண்பைப் பயன்படுத்தலாம்.

உதாரணமாக,

<IMG SRC="Nallur.jpg" Border="2">




படம் 8

இது படம் 8 இல் உள்ளவாறு தோன்றும்.

Border இன் தடிப்பை இதில் விரும்பிய அளவுகளில் கொடுக்கலாம்.

எச்ரிஎம்எல்லில் 90 இற்கும் மேற்பட்ட குறிப்புக்கள் உள்ளன எனக் கடந்த இதழில் பார்த்தோம். அவற்றில் சில இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன.

**Special SGML Constructs**

1. <DOCTYPE>
2. <!..>,<...>

**Basic Structure Elements**

1. <BODY>,</BODY>
2. <HEAD>,</HEAD>
3. <HTML>,</HTML>

**Head Section Elements**

1. <TITLE>,</TITLE>
2. <ISINDEX>
3. <LINK>
4. <META>
5. <SCRIPT>,</SCRIPT>
6. <STYLE>,</STYLE>
7. <BASE>

**Text Level Elements**

1. <A>,</A>
2. <ACRONYM>,</ACRONYM>
3. <APPLET>,</APPLET>
4. <B>,</B>
5. <BR>
6. <BDO>,</BDO>
7. <BIG>,</BIG>
8. <CITE>,</CITE>
9. <CODE>,</CODE>
10. <DFN>,</DFN>
11. <EM>,</EM>
12. <FONT>,</FONT>
13. <I>,</I>
14. <IFRAME>,</IFRAME>
15. <IMG>
16. <KBD>,</KBD>
17. <MAP>,</MAP>
18. <OBJECT>,</OBJECT>
19. <Q>,</Q>
20. <S>,</S>

இவற்றின் தொடர்ச்சியையும், இவற்றில் முக்கியமான ஏறத்தாழ 50 குறிப்புக்களைப் பற்றியும் அடுத்த இதழில் பார்ப்போம்.

- வே. நவமோகன்

# இ - மெயிலைப் பயன்படுத்துவது எப்படி?

ஊர் விட்டு ஊரெங்கும், தேசம் விட்டுத் தேசமெங்கும் ஒருவரை யொருவர் பிரிந்து வாழ்வோரெல் லாம் தமக்கிடையில் கடிதம் மூலம் கொண்ட தொடர்புகள் காலத்தால் முந்தியதாகி விட்டது.


காலத்தால் பிந்திய கம்பியூட் டர் தொழில்நுட்பத்தின் வரப்பிர சாதமான இ-மெயில் வசதி, சில நொடிப்பொழுதிலேயே இரு துருவங்களிலுள்ள இருவருக் கிடையில் கடிதங்களைப் பரிமாற வழி சமைத்துக் கொடுத்துள்ளது.

பேனா மூலம் கடிதங்களை எழுதித் தொடர்புகளை வைத்தி ருந்தவர்கள், இன்று கம்பியூட்டரை, ஏன் சில கையடக்கத் தொலை பேசிகளைக் கொண்டு இ- மெயில் மூலம் கடிதங்களை அனுப்புமள வுக்கு தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சிப்படியில் கால் பதித்துள் ளது.

இ- மெயிலைப் பயன்படுத்திக் கடிதத்தை அனுப்பும் போது, கடி தம் அடுத்த கணமே யாருக்கு அனுப்பப்பட்டதோ அவரைச் சென்றடைந்து விடும்.

இ- மெயிலூடாகக் கடிதங்களை மட்டுமன்றி படங்கள், ஒலி, ஒளி ஃபைல்கள், சொஃப்ட்வெயர்கள் போன்றவற்றையும் அனுப்ப முடி யும்.

இ- மெயில் என்பது எலெக்ரோ னிக் மெயில் (Electronic Mail) என்பதன் சுருக்கமாகும். இ - மெயில் கணக்கு ஒன்றை உரு வாக்கி அதை எப்படிப் பயன்படுத் துவது என்பது பற்றி இதில் பார்ப் போம்.




படம் 1


சாதாரணமான கடிதத்தைப் போன்றே இ - மெயிலுக்கும் முக வரி ஒன்று இருக்கும். ஆனால் சாதாரண கடித முகவரியைப் போலன்றி இ-மெயில் முகவரி பின்வருமாறு அமைந்திருக்கும்.

**diana@yahoo.com**

இதில் @ என்ற குறியீட்டுக்கு முன்னுள்ள diana என்பது இந்த இ - மெயில் முகவரிக்குரியவரது பெயராக இருக்கும். இதை யூஸர் நேம் (User name) என்று அழைப் பார்கள். @ குறியீட்டுக்குப் பின் னுள்ள yahoo.com டொமைன் நேம் (Domain name) என அழைப் பார்கள். இதில் யாஹூ என்பது இலவசமாக இ - மெயில் முகவரி களை வழங்கும் பல நிறுவனங் களில் ஒன்றின் பெயராகும்.

முதலில் இ - மெயில் முகவரி ஒன்றை எவ்வாறு பெறுவதென வும், பெற்ற முகவரியை எப்படிப் பயன்படுத்துவதெனவும் பார்ப் போம்.

இன்டர்நெட்டில் இலவசமா கவே இ-மெயில் முகவரிகளை வழங்குவதற்கெனப் பல நிறுவ னங்கள் உள்ளன. அவற்றில் சில வற்றின் முகவரிகள் வருமாறு.:




படம் 2

www.yahoomail.com
www.hotmail.com
www.email.com
www.rediffmail.com
www.mailcity.com
www.lema.com
www.rocketmail.com

ஸ்ராட் (Start) புரோகிராம்ஸ் (Programs) ஊடாக இன்டர்நெட் எக்ஸ்புளோரர் (Internet Explorer) ஐ ஓப்பின் (Open) செய்யுங்கள்.

அதன் அட்ரஸ் பார் (Address bar) இல் மேல் வரும் முகவரிகளில் ஒன்றை ரைப் செய்து, என்ரர் (Enter) கீயை அழுத்துங்கள். உதாரணமாக, www.yahoomail.com என ரைப் செய்து என்ரர் கீயை அழுத்துங்கள்.


படம் 1 இலுள்ளவாறு யாஹூ மெயிலின் ஹோம் பேஜ் தோன்றும். அதில் காணப்படும் நியூ ரூ யாஹூ? ஸைன் அப் நவ் (New to yahoo!? sign up now) என்பதைக் கிளிக் செய்யுங்கள்.

யாஹூ மெயிலில் உங்களைப் பதிவு செய்வதற்கான ∴போர்ம் (Form) ஒன்று தோன்றும்.

அந்த ∴போர்மில் முதற்பெயர், இறுதிப்பெயர், வயது, பால், நாடு, பாஸ்வேர்ட் போன்றவை அடங்கலான விபரங்கள் கேட்கப்பட்டிருக்கும். விபரங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்த பின் கீழே காணப்படும் சப்மிற் திஸ் ∴போர்ம் (Submit this form) என்ற பட்டினை கிளிக் செய்யுங்கள்.

சில விபரங்கள் பூர்த்தி செய்யப்படாது அல்லது தவறாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் அவற்றைப் பூர்த்தி செய்யும்படி குறிப்பிட்ட அந்தத் தகவல்களை மட்டும் கொண்டதான ∴போர்ம் ஒன்று தோன்றும் (படம் 2).

பூர்த்தி செய்யப்படாத அல்லது தவறாகப் பூர்த்தி செய்யப்பட்ட விபரங்களை மீண்டும் சரியாகப் பூர்த்தி செய்து சப்மிற் திஸ் ∴போர்ம் என்ற பட்டினைக் கிளிக் செய்யுங்கள்.




படம் 3

யாஹூ ஐடி (Yahoo ID) என்ற இடத்தில் கொடுத்த பெயரே இ-மெயில் முகவரியாக வரும். ஆனால், அதே பெயரில் வேறு யாராவது இ-மெயில் முகவரியை வைத்திருந்தால் குறிப்பிட்ட பெயரையுடைய இ-மெயில் முகவரியைப் பெற முடியாது.

வேறு சிலர் ஏற்கனவே இப் பெயரில் இ-மெயில் முகவரியைப் பெற்றுவிட்டதாகவும், நீங்கள் வேறு ஒரு பெயரைத் தெரிவு செய்யும் படியும் யாஹூவில் தகவல் ஒன்று வெளியாகும். அதில் நீங்கள் தெரிவு செய்வதற்கு இலகுவாக சில பெயர்களைப் பட்டியலிடும். அவற்றில் ஒன்றைத் தெரிவு செய்யலாம். அல்லது கிரியேட் யுவர் ஒன் (Create your own) என்பதைக் கிளிக் செய்வதன் மூலம் வேறு பெயரை ரைப் செய்யலாம். பின் சப்மிற் திஸ் ∴போர்ம் பட்டினைக் கிளிக் செய்யுங்கள்.


உங்களுக்கான இ-மெயில் முகவரியை வாழ்த்துக்களுடன் யாஹூ மெயில் வழங்கும் (படம் 3).

உங்கள் இ-மெயில் முகவரியை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றித் தொடர்ந்து வரும் இதழில் பார்ப்போம்.

– கணியா

**உலகை மயக்கும் இன்டர்நெட்டில் உள்ள சில தமிழ் வெப்தளங்கள்**


www.tamilossai.com
www.thamila.com
www.tamilweb.com
www.tamil.net
www.tamilboard.com
www.tamilforum.com
www.tamil.com
www.tamileuropean.com
www.tamilworld.com
www.kanithamizh.org
www.tamilnet.dk
www.tamilsoftware.org
www.thamizh.com
www.tamilagam.com
www.tamilmusic.com
www.murasu.com
www.tamilkalam.com
www.mukil.com
www.tamilcinema.com
www.tmcmoopanar.org
www.tamilcyber.com
www.tamilcanadian.com
www.infotamilcyber.com
www.tamilnorwegian.com
www.tamilpages.com
www.kalapam.com
www.paristamil.com
www.webulagam.com
www.tamlination.org
www.thamizhathamizha.com
www.namkudumbam.com
www.norwegiantamil.com
www.tamilan.com
www.tamil4ever.com




பேஜ்மேக்கர் சொ∴ப்ட்வெயர், பக்கங்களை வடிவமைப்புச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த சொ∴ப்ட்வெயரின் மூலம் பல பக்க லேஅவுட் (Layout) களைச் செய்ய முடியும். பல நுணுக்கங்களைக் கொண்ட இந்த பேஜ் மேக்கர் அச்சுவேலைகளுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பேஜ்மேக்கரைத் திறத்தல்

பேஜ்மேக்கருக்கான ஐகன் (Icon) ஐ டபிள் கிளிக் செய்வதன் மூலமோ அல்லது ஸ்ராா்ட் (Start)→ புரோகிராம்ஸ் (Programs) வழியாக அடொப் பேஜ்மேக்கர் (Adobe Page maker) (படம்1) என்பதைக்




படம் 1

கிளிக் செய்வதன் மூலமோ பேஜ் மேக்கரைத் திறந்து கொள்ளலாம்.


## புதிய ∴பைல் ஒன்றைத் திறத்தல்

ஏனைய சொ∴ப்ட்வெயர்களைப் போல் அல்லாது பேஜ்மேக்கரின் ஆரம்பத் திரையானது படம் 2




படம் 2

இலுள்ளவாறு வெற்றுத்திரையாகத்தான் தோன்றும். ஏனெனில் பேஜ்மேக்கரைப் பயன்படுத்துபவர்கள் பல்வேறு தேவைகளுக்காக பல்வேறு அளவுகளில் தங்களுக்குரிய பக்கங்களை அமைத்துக் கொள்ள விரும்புவார்கள். எனவே புதிய ∴பைல் ஒன்றைத் திறக்கும் போதே அவற்றுக்கான செற்றிங் (Setting) களைக் கொடுக்கக் கூடியவாறு பேஜ்மேக்கர் வடிவமைக்கப்பட்டுள்ளது.



படம் 3


பேஜ்மேக்கரின் பிரதான மெனுவில் ∴பைல் (File) → நியூ (New) என்பதைத் தெரிவு செய்வதன் மூலம் படம் 3 இல் உள்ளவாறு தலைப்பிடப்படாத (Untitled) ∴பைலைத் திறந்து கொள்ளலாம்.

ஆனால், ஏனைய சொ∴ப்ட் வெயர்களில் உள்ளது போல் இல்லாது இதில் பேஜ் செட்டப் (Page setup) டயலொக் பொக்ஸ் ஒன்று தோன்றும் (படம் 4). அதில் தேவையான பேஜின் வகை (Page Size), பேஜின் நீள அகலங்கள் (Dimensions), ஒழுங்கமைப்பு (Orientation) அதாவது, தேவையான பக்கம் உயரமானதாகவா (Tall) அல்லது அகலமானதாகவா (Wide) இருக்க வேண்டும் என்பவை போன்றனவற்றையும், எந்த பேஜ் நம்பரில் ஆரம்பிக்க வேண்டும் என்பதையும் (Start Page), எத்தனை பக்கங்கள் தேவை என்பதையும் (Number of Pages), அப்பக்கங்களின் இடது, வலது, மேல், கீழ் ஓரங்களில் எவ்வளவு இருக்க வேண்டும் என்பது போன்ற பல செற்றிங்குகளையும் (Margins) நீங்கள் விரும்பியவாறு கொடுத்து ஓகே (OK) செய்து கொள்ள முடியும்.

இந்த பேஜ்செட்டப் டயலொக் பொக்ஸில் காணப்படும் பேஜ சைஸ் (Page size) என்பதில் பேப்பர் சைஸ்கள் (Paper size) சில காணப்படும். இதில் தேவையான பேப்பரைப் பெற்றுக்கொள்ள பேஜ் என்பதன் அருகிலுள்ள டவுண் அரோ (Down Arrow) ஐக் கிளிக் செய்ய வேண்டும் (படம் 4).

இவற்றில் இல்லாத பேப்பர் அளவொன்றைப் பெற்றுக் கொள்ள அதில் கஸ்டம் (Custom) என்பதைத் தெரிவு செய்து அருகிலுள்ள பேஜ் டைமென்ஷன்ஸ் (Page Dimensions) என்பதில் விரும்பிய அளவுகளைக் கொடுக்கலாம்.

புதிதாக உருவாகின்ற ∴பைலில் ஏனைய செட்டப்களை (Set-up) பேஜ்செட்டப் எனும் தலைப்பின் கீழ், வரும் இதழில் பார்ப்போம்.




படம் 4

இதில் நம்பர் ஒ∴ப் பேஜஸ் (Number of pages) என்பதில் புதிதாக உருவாக்குகின்ற ∴பைலில் எத்தனை பக்கங்கள் தேவை என்பதைக் கொடுக்கலாம்.

புதிய பக்கத்தின் தோற்றமானது படம் 3 இல் உள்ளவாறு தோன்றும். அதில் முதலாவது பக்


கமும் அருகில் ரூல் பொக்ஸ் (Tool box) உம் காணப்படும். அதில் பதினான்கு கட்டளைகளுக்கான ரூல்கள் இருக்கும். அல்டஸ் (Aldus) பேஜ்மேக்கரோடு ஒப்பிடும் போது இதில் ஹாண்ட் ரூல் (Hand tool), ஸூம் ரூல் (Zoom tool), ரெக்ட்ராங்கிள் பிரேம் ரூல் (Rectangle frame tool), எலிப்ஸ் ஃபிரேம் ரூல் (Ellipse frame tool), பொலிகோன் ஃபிரேம் ரூல் (Polycon frame tool), றொடேட்டிங் ரூல் (Rotating tool) ஆகிய ஆறு ரூல்கள் மேலதிகமாகக் காணப்படும். இவை ஒவ்வொன்றின் செயற்பாடுகள் பற்றியும் அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம்.

**விளம்பரதாரர்களே!**
கம்பியூட்டர் வேர்ல்ட்டில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற வேண்டுமா? இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
☎ 074 - 710279

# எளிதாகப் பெயர் மாற்றம் செய்ய...

ஒரு ஃபைலை அல்லது ஃபோல்டரை பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்றால், நீங்கள் அந்த ஃபைலை ரைட் கிளிக் (Right click) செய்து ரீநேம் (Rename) என்பதைத் தெரிவு செய்வதன் மூலம் பெயரை மாற்றுவீர்கள்.

ஆனால், இதைவிட இலகுவாக உங்கள் ஃபைல், ஃபோல்டரின் பெயர்களை மாற்றிக் கொள்ள முடியும்.




நீங்கள் பெயர் மாற்ற விரும்பும் ஃபைல் அல்லது ஃபோல்டரை ஒரு முறை கிளிக் செய்யுங்கள். சில நொடிகள் கழித்து மீண்டும் கிளிக் செய்யுங்கள். விண்டோஸ் அந்த ஃபைல் அல்லது ஃபோல்டருக்குரிய பெயரை ஹைலைட் (Highlight) செய்து காட்டும். அதனுள் கேஸரும் காணப்படும். அவ்வேளை டிலீட் (Delete) கீயை அழுத்துவதன் மூலம் அப்பெயரை அழித்து விட்டு புதிய பெயரை ரைப் செய்து கொள்ள முடியும்.

அல்லது, நீங்கள் பெயர் மாற்ற விரும்பும் ஃபைல் அல்லது ஃபோல்டரைக் கிளிக் செய்து விட்டு F2 கீயை அழுத்துங்கள். அதன் பெயருள் கேஸர் வந்திருக்கும். இனி, நீங்கள் அப்பெயரை அழித்து விட்டு புதிய பெயரை ரைப் செய்து கொள்ளுங்கள்.

# கம்பியூட்டர் அறிவுப்போட்டி

கம்பியூட்டர் துறை தொடர்பான உங்கள் அறிவைப் பரீட்சிக்க இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்! கீழ் வரும் வினாக்களுக்கு சரியான விடைகளை எழுதி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடைகளை எழுதியனுப்பும் அதிர்ஷ்டசாலிகள் மூவருக்கு சைபர் சொலூஷன்ஸ் (Cyber Solutions) இன் tamilcyber.com வழங்கும் ரூ.1500 பெறுமதியான சீடிக்கள் பரிசாக வழங்கப்படும்.

1) இன்டர்நெட்டில் வெளியாகத் தொடங்கிய முதலாவது தமிழ் மின் இதழ் எது?

2) மைக்ரோசொஃப்ட் (Microsoft) நிறுவனத்தின் ஸ்தாபகர் யார்?

3) வடக்கிலிருந்து இன்டர்நெட்டில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகையின் பெயர் யாது?

4) மைக்ரோசொஃப்ட் நிறுவனம் ஒக்டோபர் மாத இறுதியில் வெளியிடவுள்ள ஒப்பரேட்டிங் சிஸ்ரம் எது?


5) www யாரால் உருவாக்கப்பட்டது?

## போட்டி விதிமுறை

* மேலுள்ள ஐந்து வினாக்களுக்கும் சரியான விடைகளை எழுதி கீழுள்ள எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். விடைகள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி 30.09.2001. ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம்.

**கம்பியூட்டர் அறிவுப்போட்டி -01**
**"கம்பியூட்டர் வேர்ல்ட்"**
**417/2, காலி வீதி,**
**கொழும்பு - 03.**

## வியத்தகு நவீன
# விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்





கம்பியூட்டர் தொழில்நுட்பத்தை முதன்மைப்படுத்தி, இந்த உலக மானது இன்று விஞ்ஞான யுக மாக விடிந்து கொண்டிருக்கிறது. மிலேனியத்தையே வென்று நிற்கும் கம்பியூட்டர்களின் ஆற்றலின்

## வெட்கத்திற்கு மருந்து
## காது கேளாதோருக்கு தொலைபேசி

திறன் உச்சிக்கே சென்று கொண்டிருக்கும் அதே வேளை, மருத்துவத்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல என்று கூறுமளவிற்கு வியத்தகு கண்டுபிடிப்புக்களில் ஈடுபட்டுள்ளது.

### வெட்கத்துக்கு மருந்து

கம்பியூட்டர்களுக்கு நுண்ணறிவைக் கொடுக்க ஈடுபாடு காட்டி வரும் ஆராய்ச்சியாளர்கள், மனித மூளையின் செயல் திறனை அதிகரிக்கும் மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

அலுப்பு மருந்து போன்ற பெரும்பாலான மருந்துகள் வெறும் விற்றமின்களையும் உடலுக்கு வேண்டிய இரசாயனக் கனியங்களையும் மட்டுமே கொண்டுள்ளன. ஒரு சில மருந்துகள் தான் அதிக சக்தி வாய்ந்தவையாக மூளையின் சக்தியை அதிகரிக்கச் செய்கின்றன. இந்த வகையில் அண்மைக் காலத்தில் நூட்ரொபிக்ஸ் பிரெய்ன் பூஸ்டர்ஸ் (Nootropics or Brain Boosters) என்றழைக்கப்படும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு இயற்கையாகவே அமைந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற நாற்குணங்களில் ஒன்றான நாணம் (வெட்கம்) பெண்களை மட்டுமல்ல ஆண்களையும் ஆட்கொண்டு விடுகின்றது. எவரையாவது பார்த்தால் வெட்கப்பட்டுத் தலை குனிந்து கொள்வது, நாலு பேர் முன்னிலையில் கூச்சப்படுவது என வெட்கத்தினாலும் ஒரு விதத் தாழ்வு உணர்விலும் வாழ்க்கையில் பின்னுக்குத் தள்ளப்படுபவர்களைக் கவனத்தில் கொண்டு மருந்தொன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

வெட்கத்தில் "நாணிக்கோணி" மூலையில் ஒதுங்குபவர்கள் நம் நாடுகளில் மட்டுமல்ல இங்கிலாந்தில் கூட இருக்கிறார்கள். அண்மைய கணிப்பீட்டின்படி, இப்படிப்பட்டவர்கள் 30 இலட்சம் பேர் இங்கிலாந்தில் உள்ளனராம். இவ்வாறானவர்கள் மருத்துவர்களை அணுகக் கூட சங்கோஜப்படுவார்கள்.

"ஸ்மித்க்ளைன் பீச்சம்" கம்பனியின் "செரோக்சாட்" என்ற இந்த மாத்திரையை பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். வெட்கத்திற்கான மருந்தும், "வயாகரா" போல மிகவும் பரபரப்பாக விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



### டிஜிட்டல் தொலைபேசி

காது கேளாதவர்கள் தொலைபேசியைப் பயன்படுத்த முடியாது என்ற குறையை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய டிஜிட்டல் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த டிஜிட்டல் தொலைபேசியைப் பயன்படுத்துபவர்கள் பேச வேண்டியதில்லை. திரையில் கைகளால் காட்டக்கூடிய சைகைகளைக் கொண்டே இரு முனைகளிலும் உள்ளவர்கள் உரையாடிக் கொள்ளலாம்.

பி.ரி. நிறுவனம் (முன்பு பிரிட்டிஷ் ரெலிகொம்) மூன்று பல்லூடகத் தனிக் கம்பியூட்டர்களை

**கணினிப்பித்தன்**

யும் ISDN வசதிக்கான ஓராண்டுக் கட்டணத்தையும் அளிக்கிறது. இதன் மூலம் பல்வேறு மருத்துவமனைகளும் காதுகேளாதோர் அமைப்புக்களும் இணைக்கப்படும். 87 இலட்சம் பேர் இதனால் பயனடைகின்றார்கள்.

அடுத்த இதழிலிருந்து இ- நண்பர்கள் என்னும் புதிய பகுதி ஆரம்பமாகிறது.

இந்தப் பகுதியில் உங்களின் இ- மெயில் முகவரிகளும் இடம் பெற வேண்டுமாயின் உங்கள் பெயர், வயது, பால், இ-மெயில் முகவரி என்பவற்றை ஒரு தபாலட்டையில் எழுதி எங்களுக்கு அனுப்பி வையுங்கள். - ஆ.ர்

## புதிய சந்தாத்திட்டம்

மாதம் இருமுறை மலரும் 'கம்பியூட்டர் வேர்ல்ட்' கணினி சஞ்சிகையை நீங்கள் வீட்டிலிருந்தே பெற்றுக் கொள்வதற்கும் உங்கள் பிரதியை உறுதி செய்து கொள்வதற்குமான புதிய சந்தாத்திட்டம். இது உங்களுக்கொரு வரப்பிரசாதமாகும்.

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள இன்றே இச்சந்தாப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்.

### மாதிரிப் படிவம்

பெயர் : -----------------------

முகவரி : -----------------------

-----------------------

-----------------------

-----------------------

-----------------------

தொலைபேசி இல: -----------

இ.மெயில்: ---------------------

**சந்தா விபரம்**

ஆறு மாதங்கள் - ரூ. 180 (12 இதழ்கள்)

ஒரு வருடம் - ரூ. 360 (24 இதழ்கள்)

இரு வருடம் - ரூ. 720 (48 இதழ்கள்)

மூன்று வருடம் - ரூ. 1080 (72 இதழ்கள்)

நான் இத்துடன் -------------- இற்கான காசோலை / காசுக்கட்டளை இல.:---------------------- ஐ Millennium Advertising & Printers (Pvt) Ltd என்ற பெயருக்கு அனுப்பி வைக்கிறேன்.

◆ காசுக்கட்டளைகளை கொள்ளுப்பிட்டி தபாலகத்தில் மாற்றத்தக்கதாக அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**Millennium Advertising & Printers (Pvt) Ltd.
417/2, Galle Road,
Colombo - 03.**


## மாய அறுவைத் தளம்

மருத்துவ வரலாற்றின் பக்கங்களில் புதிய சாதனையாக, உலகின் முதல் "மாய அறுவை ஆய்வுத்தளம்" ஒன்றை பிரிட்டிஷ் பல்கலைக்கழகத்தினர் உருவாக்கியுள்ளார்கள்.

இறந்து போனவர்களின் உடல்களை அறுத்து ஆய்வு செய்வது மருத்துவர்களின் வழக்கம். இந்தத் தளத்தில் உண்மையான சடலம் எதுவும் இல்லாமலே எல்லாச் சோதனைகளையும் விளக்கிக் காட்டுகிறார்கள். ஏழு வகையான காரணங்களால் ஏற்படும் மரணங்களை ஆராய இத்தளத்தில் வசதிகள் உள்ளன. இதில் பல தகவல்களைச் சேர்க்கும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மரபணு (Gene) கைரேகைப் பதிவு முறையைக் கண்டுபிடித்த இடம் லீசெஸ்டர். இதே இடத்தைச் சேர்ந்த ரிம் ரெய்லர் என்ற மாணவரே இத்தளதைத் உருவாக்கி இருக்கிறார்.

பல்வேறு காரணங்களால் மரணமடைந்தவர்களைப் பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்து விடுவதால் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தால் இறந்து போனவர்களின் உடலைத் தேடிக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லாமல் போய்விடுகிறது.

கம்பியூட்டரின் உதவியுடன் மருத்துவம் கற்பிக்கும் முயற்சியில் இது ஒரு மைல் கல் எனலாம்.

## கிருமிகளைக் கண்டுபிடிக்க "சிப்"

கடன் அட்டை (Credit Card) அளவுள்ள சாதனம் ஒன்றில் பொருத்தப்பட்ட மனிதத் தலை முடியின் விட்டத்தில் நூறில் ஒரு பங்கிற்கும் குறைவான விட்டமுள்ள சிப் (Chip) இன் மூலம் நோய்க்கிருமிகளை இனங்காண முடியும். இச்சிப்பை நுண்மின்னணுவியலும், நுண்ணுயிரியலும் இணைந்து உருவாக்கியுள்ளன. ஒளிக்கற்றைகளைப் பயன்படுத்தி இயங்கும் மின்வாய்களின் வழியாகச் செல்லும் மின்னோட்டத்தை அளப்பதன் மூலம் நோய்க் கிருமிகளின் எண்ணிக்கையைக் கண்காணிக்க முடியும்.

வயிற்றுப் போக்கு, காசநோய் முதலியவற்றை உண்டாக்கும் கிருமிகளையும், தண்ணீரை மாசுபடுத்தும் பக்டீரியா வகைக் கிருமிகளையும், கூடக் கண்டறிவதற்கு இந்த சிப் (Chip) பயன்படும். 1.5 மில்லியன் பவுண் செலவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக இந்தச் சிப்பைக் குறைந்த விலையில் தயாரிக்கும் உத்திகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## ஹொட்மெயில் பற்றி...

இலவச இ-மெயில் எக்கவுண்ட் (E-mail account) ஐ வழங்கிய முதலாவது நிறுவனமாக ஹொட்மெயில் (Hotmail) விளங்குகிறது. 1996 இல் இலவச இ-மெயில் முகவரிகளை வழங்க, ஆரம்பித்த இந்நிறுவனம் 6 மாதங்களுக்குப் பின் ஏறத்தாழ 1 மில்லியன் பயனர்களைப் பெற்றது.

சபீர் பாடியா என்ற இந்தியர் ஒருவராலேயே ஹொட்மெயில் நிறுவனம் உருவாக்கப்பட்டது. பின்னர் 1997 இல் மைக்ரோசொஃப்ட் (Microsoft) நிறுவனத்துக்கு விற்கப்பட்டது. தற்போது 40 மில்லியனுக்கும் அதிகமான பயனாளர்கள் ஹொட்மெயில் நிறுவனத்தில் இ-மெயில் எக்கவுண்ட்களை வைத்திருக்கின்றனர்.




# விதவித பிரிண்டர்கள் வெவ்வேறு வகைகளில்

கீபோர்ட், மவுஸ், ஸ்கானர் போன்ற உள்ளீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தியும், இன்டர்நெட்டிலிருந்து டவுண்லோட் செய்தும் நாம் மொனிட்டரில் பார்க்கின்ற விடயங்களை (Soft copy) கடதாசி போன்றவற்றில் பிரிண்ட் (Hard copy) செய்து பார்ப்பதற்கு பிரிண்டர்கள் அவசியமாகும்.

பிரிண்டர்களைப் பொதுவாக 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

1. டொட்மெற்றிக்ஸ் பிரிண்டர்கள் (Dot matrix printers)
2. லேசர் பிரிண்டர்கள் (Laser printers)
3. இங்க்ஜெட் பிரிண்டர்கள் (Inkjet printers)

பிரிண்டர்களை இவ்வாறு 3 வகைப்படுத்தினாலும் இவற்றின் பொதுவான தொழிற்பாடு ஒன்றே தான். பல்வேறு தேவைகளுக்கென நிதிநிலைமைகளைக் கருத்திற் கொண்டு இம்மூன்று பிரிண்



டர்களின் பயன்பாடுகள் இன்றும் குறையாமலே இருந்து வருகின்றன.

பத்திரிகை நிறுவனங்கள், பதிப்பகங்கள், அச்சகங்கள், விளம்பரக் கம்பனிகள் போன்றன அச்சுத் தேவைகளுக்காக (Offset) லேசர் பிரிண்டர்களைப் பயன்படுத்துகின்றன. ஏனெனில் ரேசிங் (Tracing) பேப்பர்களில் அச்சுத்தரம் உள்ளதாக பிரிண்ட் செய்து கொள்ள இவை அவசியமாகும். இவற்றின் அச்சுத்தரம் அதிகம் என்பதால் இவற்றுக்குப் பயன்படுத்தப்படும் ரோனர் (Toner) களின் விலையும் அதிகமாகும். எனவே, எழுத்துப்பிழைகளைத் திருத்த புரூ∴ப் (Proof) எடுப்பதற்கு டொட்மெற்றிக்ஸ் பிரிண்டர்களைப் பயன்படுத்துகிறார்கள். ஏனெனில் இது சிக்கனமானதாகும்.

இன்று லேசர் பிரிண்டர்களிலேயே எக்கனமிக் மோட் (Economic mode) என்ற கட்டளை காணப்படுகிறது. மேலும் சில பிரிண்டர்களில் சேவ் ரோனர் (Save Toner), புரூ∴ப் (Proof) என்ற கட்டளைகளும், தேவையான டிபிஐ (DPI) அளவுகளில் பிரிண்ட் எடுத்துக் கொள்வதற்கான வசதிகளும் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் ரோனர்களின் ஆயுட் காலத்தை நீடித்துக் கொள்ளலாம்.

## கனினிப்பித்தன்

டிபிஐ (DPI) என்பது டொட்ஸ் பேர் இஞ்ச் (Dots Per Inch) என பதன் சுருக்கமாகும். அதாவது ஒவ்வொரு அங்குலத்திலும் உள்ள புள்ளிகளைக் குறிக்கும். உதாரணமாக, 300 DPI என்பது 300X 300 புள்ளிகளாக ஒரு சதுர அங்குலத்தில் அமைந்திருக்கும். 600 DPI, 1200 DPI தரமுள்ள லேசர் பிரிண்டர்கள் தற்போது பரவலாகப் பாவனையில் உள்ளன.

பொதுவாக லேசர் பிரிண்டர்களை போஸ்ட்ஸ்கிரிப்ட் (Postscript), நொன் போஸ்ட்ஸ்கிரிப்ட் (Non Postscript) என இரண்டு வகைப்படுத்தலாம்.

இன்று இலங்கைச் சந்தையில் லேசர் பிரண்டர்கள் எனப் பரபரப்பாக விற்பனையாவது இந்த இரண்டாவது வகை நொன் போஸ்ட்ஸ்கிரிப்ட் பிரிண்டர்களாகும். போஸ்ட்ஸ்கிரிப்ட் பிரிண்டர்களோடு ஒப்பிடும் போது இவற்றின் பிரிண்ட் தரம், மற்றும் ஒரு சில வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றது.


இவை பிட்மப் (Bitmap) பாணியில் பிரிண்ட் செய்கிறது. இப்பிரிண்டர்களிற் சில, எச்பிபிசிஎல்வி (HPPCLV) எனப்படும் அடொப் போஸ்ட்ஸ்கிரிப்ட் லெவல் (Adobe Postscript Level) எனும் பிரிண்டர் மொழியாலும் பிரிண்டரை இயக்குகிறது. இப்போது வெளிவருகின்ற லேசர் பிரிண்டர்களில் கலர் செப்பரேஷன் (Colour separation) வசதி இருந்தாலும் இவற்றில் தரத்தை எதிர்பார்க்க முடியாது உள்ளது.

இன்று கலர் பிரிண்ட் எடுப்பதற்கும், பொதுவான தேவைகளுக்குப் பிரிண்ட் எடுத்துக் கொள்வதற்கும் மலிவான விலையில் இங்க்ஜெட் பிரிண்டர்கள் அறிமுகமாகியுள்ளன. இவற்றின் விலைகளுக்கேற்ப தரமும் வேறுபடுகின்றது. இவற்றுக்குப் பயன்படுத்தப்படும் கார்ட்ரேஜ்களின் விலை லேசர் பிரிண்டருக்குப் பயன்படுத்தப்படும் ரோனர்களின் விலையை விடக் குறைவாக உள்ள போதிலும் இதில் எடுக்கக்கூடிய கொப்பிகளின் எண்ணிக்கை அதைவிடக் குறைவாகவே உள்ளதால் இங்க்ஜெட்டில் கலர் பிரிண்ட் எடுப்பதற்கான செலவு அதிகமானதாகும். பிரிண்டர்கள் பற்றிய மேலதிக விபரங்கள் அடுத்த இதழில்..

## 01.10.2001 இல் வெளிவரவுள்ள அடுத்த இதழில்...

- AUTOCAD அறிமுகம்
- இன்டர்நெட் உலகில் "சற்றிங்"
- பிரிண்டர்கள் பற்றிய புதிய தகவல்கள்
- விண்டோஸ் எக்ஸ்புளோரர்
- எச்ரிஎம்எல் (HTML)
- இ - நண்பர்கள்

# வாசகர் கணைகள்



"கம்பியூட்டர் வேர்ல்ட்" இன் வரவு கண்டு மகிழ்ச்சியடைந்தேன். கம்பியூட்டர் கல்வியின் பயன்பாடு அதிகரித்துள்ள கால கட்டத்தில், காலத்தின் தேவை கருதிய "கம்பியூட்டர் வேர்ல்ட்" இன் உதயம் நிச்சயம் பாராட்டுதற்குரியது.

"கம்பியூட்டர் வேர்ல்ட்" காலங்கள் பல கடந்து சாதனை படைக்க என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கே. காயத்திரி,
கொழும்பு -15.

செப்டெம்பர் 1ஆம் திகதி "கம்பியூட்டர் வேர்ல்ட்" எம் கரம் சேர்ந்தது. எளிய நடையில் யாவருக்கும் விளங்கக் கூடிய விதத்தில் கருத்துக்கள் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. அதில் வெளியான "பிரிண்டர் ஒன்றை இன்ஸ்ரோல் செய்தல்" என்ற ஆக்கம் மூலம் மிகவும் பயனடைந்தேன். தொடர்ந்து வரும் இதழ்களில் புதிய விடயங்கள் பலவற்றை எதிர்பார்க்கிறேன். தங்கள் முயற்சி தொடர எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். நௌபர்,
புத்தளம்.

கம்பியூட்டர் துறையில் முதன் முறையாகக் காலடி எடுத்து வைத்திருக்கும் நான் தங்களின் முதலாவது "கம்பியூட்டர் வேர்ல்ட்" சஞ்சிகை மூலம் பெரிதும் பயனடைந்தேன். விளங்கிக் கொள்வதற்கு இலகுவான கட்டுரைகள், விடயங்களுடன் முதலாவது இதழ் வெளிவந்துள்ளமை உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விடயம். இ -மெயில், இன்டர்நெட் பற்றிய ஆரம்ப விளக்கங்களைத் தொடர்ந்து வரும் இதழ்களிலும் எதிர்பார்க்கிறேன். தருவீர்களா?

என். அன்ரனீஸ்,
நீர்கொழும்பு.

எளிமையாகவும், புதியவர்களும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலும் "கம்பியூட்டர் வேர்ல்ட்" டின் உள்ளடக்கம் அமைந்திருந்தது. குறைகள் காணப்பட்டாலும் புதிய முயற்சி என்பதால் அவை காலப்போக்கில் நிவர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கிறோம். சமூகத்தின் எல்லா மட்டத்தினரும் பயனடையக் கூடிய விதத்தில் மிகவும் குறைந்த விலையில் வெளியாவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி.

எம். பாத்திமா ஷிபானா,
பதுளை.



**"கம்பியூட்டர் வேர்ல்ட்"**
அருமையான பெயர்.
கம்பியூட்டர், உலகில்
மாற்றங்கள் ஏற்படுத்தி
இன்று உலகையே
கம்பியூட்டர் உலகாக்கி
விட்டது என்ற பொருள்படும்
இதன் பெயர் புதுமையானது.
இது போன்றே இதன்
உள்ளடக்கமும்
அருமையிலும் அருமை.....

ஏ. சித்தார்த்தன்,
மானிப்பாய்.

ஆசிரியர் நவமோகனின் புதிய வழிகாட்டலில் கணினியுலகில் பிரபலமான எழுத்தாளர்களின் ஆக்கங்களைக் கொண்டு உதித்துள்ளது உனது அவதாரம். இது ஆச்சரியமல்ல; அவசியமானது.

கணினியன்பன்.




அச்சகத்துறையினருக்குக் கை கொடுக்கும் டிரிபி தொடர், படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது. "இன்டர்நெட்டில் வெளியாகும் தகவல் தொடர்புச் சாதனங்கள்" என்ற ஆக்கம் அரிய விடயங்களைப் புரிய வைத்தது.

கி. ரவிக்குமார்,
தெஹிவளை.

சிற்றின்பம், பேரின்பம் கடந்து கணினி தரும் இலத்திரனியல் இன்பம் புதிய நூற்றாண்டில் புதுமை தான். இலத்திரனியலில் மட்டும் இன்பமில்லை, இச்சஞ்சிகையும் அதுவே தானென ஒரு கணம் எண்ண வைக்கிறது "கம்பியூட்டர் வேர்ல்ட்".

எஸ். ரூபிணி,
மாத்தளை.

மிகவும் குறைந்த விலையில் மாதமிரு முறை மலருகின்ற உங்கள் சஞ்சிகை கண்டு மகிழ்ந்தேன். அதில் பிரசுரமான டிஜிட்டல் ஓடியோ பிளேயர், பிரபலமாகி வரும் மொபைல் பீசி போன்ற ஆக்கங்களைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கிறேன்.

ஆ. யேசுதாசன்,
வவுனியா.

வாசகர்களே !

**"கம்பியூட்டர் வேர்ல்ட்"**
பற்றிய உங்களது
ஆக்கபூர்வமான
கருத்துக்களையும்,
ஆக்கங்களையும் எமக்கு
அனுப்பி வையுங்கள்.

# இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 5.0

*– மேலும் சில குறுக்குவழிகள்*

- ∴பேவரிட்ஸ் (Favorites) லிஸ்ட்டில் வேகமாக வெப்பேஜ் ஒன்றை சேவ் செய்வதற்கு,
  **- Ctrl + D** ஐ அழுத்துங்கள்.

- அக்ரிவ் (Active) ஆகவுள்ள ∴பிறேம் ஒன்றை அல்லது பக்கம் ஒன்றை பிரிண்ட் செய்வதற்கு,
  **- Ctrl + P** ஐ அழுத்துங்கள்.

- புதிதாக இன்டர்நெட் எக்ஸ்புளோரர் விண்டோ ஒன்றைத் திறப்பதற்கு,
  **- Ctrl + N** ஐ அழுத்துங்கள்.

- டவுண்லோட் ஆகிக்கொண்டிருக்கும் பக்கத்தை நிறுத்துவதற்கு,
  **- Esc** ஐ அழுத்துங்கள்.

- வெப்பேஜ் ஒன்றில் குறிப்பிட்ட சொல் அல்லது சொற்றொடர் ஒன்றைத் தேடுவதற்கு,
  **- Ctrl +F** ஐ அழுத்துங்கள்.

- அடுத்த வெப்பேஜிற்குச் செல்வதற்கு,
  **- Alt + →** ஐ அழுத்துங்கள்.

- முந்தைய வெப்பேஜிற்குச் செல்வதற்கு,
  **- Alt + ←** ஐ அழுத்துங்கள்.

- அட்ரஸ் பார் (Address bar) இல் வெப்தள முகவரிகளை டிஸ்பிளே ஆகச் செய்வதற்கு,
  **- F4** ஐ அழுத்துங்கள்.

- நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் வெப்பேஜ் பிந்திய தகவல்களைக் கொண்டிருக்கிறதா என உறுதி செய்து கொள்வதற்கு.
  **- F5** ஐ அழுத்துங்கள்.

- வெப்பேஜ் ஒன்றில் காணப்படும் ∴பிறேம்களுக்கிடையில் முன்னோக்கி நகர்வதற்கு,
  **- Ctrl + Tab** ஐ அழுத்துங்கள்.

- ∴பிறேம்களுக்கிடையில் பின்னோக்கி நகர்வதற்கு,
  **- Shift + Ctrl + Tab** ஐ அழுத்துங்கள்.

- உங்களுக்கு விருப்பமான வெப்தளங்களின் பெயர்களை லிங்க்ஸ் பார் (Links bar) இல் தோன்றச் செய்வதற்கு,
  **- View → Toolbars → Links**

- அட்ரஸ் பாரில் ரெக்ஸ்ட் (Text) ஐ செலெக்ட் செய்வதற்கு,
  **- Alt + D** ஐ அழுத்துங்கள்.

- ஓ∴ப்லைன் (Offline) இல் வெப்பேஜ் ஒன்றை வாசிப்பதற்கு,
  **- File → Save As**

- வெப்பேஜ்களில் ரெக்ஸ்ட்டை பெரிதாகவோ, சிறிதாகவோ தோன்றச் செய்வதற்கு,
  **- View → Text size**

- இ-மெயில் மூலம் வெப்பேஜ் ஒன்றை அனுப்புவதற்கு,
  **- File → Send → Page By E- mail**

- வெப்பேஜ்களின் லிங்க் (link) களின் நிறத்தை மாற்றுவதற்கு,
  **- Tools → Internet options → colors**

- ரூல்பாரிலுள்ள பட்டின்களின் பெயர்களைப் பார்ப்பதற்கு,
  **- View → Toolbars → Customize → Show Text**

- வெப்தளத்திலுள்ள படமொன்றை அல்லது அதன் பின்னணியை வோல்பேப்பர் (Wallpaper) ஆக்குவதற்கு,
  - அந்தப் படத்தின் மேல் ரைட் கிளிக் (Right click) செய்து வரும் மெனுவில் "Set as Wallpaper"என்பதைக் கிளிக் செய்யுங்கள்.

- வெப்பேஜ் ஒன்றிலுள்ள ரேபிள் ஒன்றை அவற்றின் லிங்க் (Link) களுடன் பிரிண்ட் செய்வதற்கு,
  - பிரிண்ட் டயலொக் பொக்ஸில் "Print table of links" என்பதைக் கிளிக் செய்யுங்கள்.


- குறித்த ஒரு வெப்பேஜிலுள்ள லிங்க் (Link) களுடன் அந்த வெப்பேஜை பிரிண்ட் (Print) செய்வதற்கு,
  - பிரிண்ட் டயலொக் பொக்ஸில் "Print all linked documents" என்பதைக் கிளிக் செய்யுங்கள்.

- வெப்பேஜ் ஒன்றிலுள்ள ∴பிறேம் ஒன்றை வேகமாகப் பிரிண்ட் செய்வதற்கு,
  - அந்த ∴பிறேமை ரைட் கிளிக் செய்யுங்கள். வரும் மெனுவில் "Print" என்பதைக் கிளிக் செய்யுங்கள்.

- வெப்பேஜ் ஒன்றை அல்லது படம் ஒன்றை திறக்காமலேயே சேவ் (Save) செய்வதற்கு,
  - அதை ரைட் கிளிக் செய்து வரும் மெனுவில் சேவ் ராகட் அஸ் (Save Target As) என்பதைக் கிளிக் செய்யுங்கள்.

# ஹெல்ப் தொகுப்பைப் பயன்படுத்துவது எப்படி?

கணினியில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது எமக்கு





படம் 1

ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு கணினியிலேயே வழி உள்ளது. ஹெல்ப் (Help) என்ற தொகுப்பின் மூலம் எமக்கு ஏற்படும் சந்தேகங்கள் அனைத்தையுமே தீர்த்துக் கொள்ளலாம்.

ஹெல்ப் தொகுப்பில் சிறுசிறு தலைப்புக்கள் காணப்படும். இவற்றில் எமக்கு எந்தெந்த விதத்திலெல்லாம் சந்தேகங்கள் வரலாமோ அவை யாவும் வரிசைக்கிரமமாக ஒழுங்குபடுத்தப்பட்டு பட்டியலிடப்பட்டிருக்கும்.

விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்ரம் (Windows Operating System) உள்ள கணினியில் ஸ்ரார்ட் (Start) ஐக் கிளிக் செய்து வரும் மெனுவில் ஹெல்ப் (Help) என்பதைக் கிளிக் செய்தால் படம் 1 இலுள்ளவாறு ஓப்பின் ஆகும். அல்லது டெஸ்க்ரொப்பில் இருக்கும் போது, கீ போர்ட் (Key board) இலுள்ள F1 என்ற கீயை அழுத்துவதன் மூலமும் ஹெல்ப் மெனுவைத் திறந்து கொள்ளலாம்.

முக்கியமாக, ஃபோல்டர் (Folder) ஒன்றில் உள்ள போது அல்லது விண்டோஸ் எக்ஸ்புளோரர் (Windows Explorer) இல் அல்லது மை கம்பியூட்டர் (My




படம் 2

Computer) இலுள்ள போது F1 கீயை அழுத்துவதன் மூலமோ, அன்றி இவற்றின் மெயின் மெனுவில் உள்ள ஹெல்ப் என்பதில் ஹெல்ப் ரொப்பிக்ஸ் (Help Topics) என்பதைக் கிளிக் செய்வதன் மூலமோ ஹெல்ப்பைத் திறந்து கொள்ளலாம்.

F1 கீயை, அப்ளிகேஷன் ஒன்றில் உள்ளபோது அழுத்தினால் அந்த அப்ளிகேஷனுக்கான ஹெல்ப்பைப் பெற்றுக்கொள்ளலாம் (படம் 2).

அதில், கொன்டென்ட்ஸ் (Contents), இன்டெக்ஸ் (Index), சேர்ச் (Search) என்ற 3 பட்டின்கள் காணப்படும். அதில் கொன்டென்ட்ஸைக் கிளிக் செய்தால், அதன் கீழ் பல தலைப்புக்கள் காணப்படும். விண்டோஸிற்கு வரவேற்கிறோம், விண்டோஸை அறிமுகப்படுத்துகிறோம் என்ற தலைப்புக்களின் கீழ் பிரிண்ட் (Print) செய்ய வேண்டுமா? நெற்வேர்க்குடன் உங்கள் கணினியை இணைக்க வேண்டுமா? ஹார்ட்வெயர், சொஃப்ட்வெயரை நிர்வகிக்க வேண்டுமா? கணினியை ஸ்ரார்ட் செய்ய வேண்டுமா? எனப் பல தலைப்புக்கள் இருக்கும். இவை ஒவ்வொன்றின் மீதும் கிளிக் செய்யும் போது, மேலும் பல உபதலைப்புக்கள் பட்டியலிடப்படும்.

இன்டெக்ஸ் (Index) என்பதன் கீழ் பல சொற்கள் காணப்படும். அவற்றில் ஒன்றைக் கிளிக் செய்தால் அந்தச் சொல் பற்றிய தகவல்கள் பட்டியலிடப்படும்.

1. இன் கீழ் எமக்குத் தேவையான விடயத்தை ரைப் செய்வதன் மூலம் அது தொடர்பான விடயங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு, கணினி ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது எமக்கு ஏற்படும் சந்தேகங்களைக் கணினியின் மூலமே தீர்த்துக் கொள்வதற்கு ஹெல்ப் தொகுப்பு வழி சமைக்கிறது.

- கணினிகா



# பிரபலமாகும் தமிழ் மென்பொருட்கள்

"எங்கும் தொழில்நுட்பம் என் பதுவே பேச்சு, அதுவும் தகவல் தொழில்நுட்பம் என்பதுவாய் ஆச்சு"

என்று பாடிப் பாராட்டும் அளவிற்குத் தகவல் தொழில்நுட்பம் உலகெங்கும் விரிந்து பரவி அதிவேக ஆக்கிரமிப்புச் செய்து மனித குலத்தை வியப்படையச் செய்திருககிறது."உலகத்தைக் கிராமமாக்கும்" விந்தையைச் செய்திருக்கும் இத்தகவல் தொழில்நுட்பம் எமது இனத்திற்கு எந்த விதமான பாதிப்பை அல்லது மேம்படுத்தலை ஏற்படுத்தப் போகிறது என்பதே எம்மக்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் கேள்வியாகும்.

இதற்கு ஈடுகொடுக்க முடியாது தயங்கி விட்டால் நாம் தாழ்ந்து விடுவோம் என்பதை உணர்ந்த எம்மிற் சிலர் தகவல் தொழில் நுட்பத்தை தமிழில் ஊட்டி, அறிவுத்தாகம் ஏற்பட உழைக்கிறார்கள். இந்த வரிசையில் தமிழில் மென்பொருட்கள் இல்லை என்ற குறையை நீக்கும் பணியாக சென்னையில் இருந்து செயற்படும் சென்னைக் கவிகள் தமிழ் மொழியில் மென்பொருட்களைத் தயார் செய்து தந்திருக்கிறார்கள். இவர்களால் தயாரித்து வழங்கப்பட்ட மென்பொருள் சீடிக்கள் இங்கு குறிப்பிடத்தக்கவையாகும்.

அவற்றில், G.O 17 நியமத்திற்கமைய படைக்கப்பட்ட முதல் தமிழ் மென்பொருள் என்ற பெருமையைத் தட்டிக் கொண்ட பெருமை பதமி (2.0) க்கு உண்டு.

"இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று புதுமைக்குக் கட்டியம் கூறினான் பாரதி. மண்ணில் புதுமை, விண்ணில் புதுமை, பொறியியலில் புதுமை, எதிலும் புதுமை. மானிட மேன்மை - பூத்திடும் புதுமையில் தான் அர்த்தப்படுகிறது. எங்கள் தமிழினமும் இதற்கு விதிவிலக்கல்ல. வயல்வெளியும், வியர்வைத் துளியும் விளைத்த புதுமை - புதுநெல்லாய், பொங்கலாய்ப் பரிணமிக்கின்றது. கணிப்பொறியும், தமிழ்மொழியும் விளைத்த புதுமை பதமியாய் பரிணமித்திருக்கிறது" என்ற இதயத்தை ஈர்க்கும் அறிமுகத் துடன் பதமி 2.0 தமிழர் மத்தியில் நடமாட வந்திருக்கிறது. தமிழால் எல்லாம் முடியுமா? என்ற சவாலை எதிர்கொண்டோர் பெற்ற வெற்றிக்கனி தான் பதமி 2.0 என்ற சொல்லாளர் (Word Processor).




அப்படி இதிலென்ன சிறப்பு என்போரும் இருக்கலாம். நான்கு வித விசைப்பலகைகள், ஒலிப்பியல் தட்டச்சு, உரோமானியப்படுத்தப்பட்ட தளவமைப்பு என அனைத்தும் உலகத் தமிழ் இணைய மாநாடு (1999) விதித்த தரப்படுத்தலுக்கு அமைவாகவே இருக்கின்றதென்பதும் பெருமைக்குரியதாகும். மற்றும் முக்கிய அம்சங்களாக,

- தமிழோடு ஆங்கிலத்தையும் உள்ளிடும் வசதி.
- எழுத்துருவகை (Fonts) தமிழில் 40+.
- கோப்பு, தொகு, பலகை, சீர், அஞ்சறை முதலிய இருப்பு பட்டி (Menu) மற்றும் இருப்பு தொடர்பான உதவித்தகவல்கள் அனைத்தையும் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும்படியான எளிய தமிழ்.
- வார்த்தைகளைச் சரிபார்க்கவும் ஏதுவாக சொல் திருத்தி (Spell Check).
- வார்த்தைகளுக்கிடையில் சந்தி பிழைதிருத்தம் செய்ய ஒரு அமைப்பு.
- ஒரே அர்த்தத்தைக் குறிக்கக் கூடிய வார்தைகளைக் காண்பதற்கு எளிமையான நிகண்டு அமைப்பு.
- ஒரே மாதிரியான உச்சரிப்புச் சொற்களும் பல அர்த்தங்களைக் காண உதவும் "நரலம்" (Similar Sounds).
- வார்த்தைகளை அகரவரிசைப்படுத்த உதவும் எளிமையான அகர வரிசை (Indexing).
- ஒரு பதமியில் உள்ள வார்த்தைகள், எழுத்துக்கள், வரிசைகள், பத்திகள் எவ்வளவு உள்ளன என்பதைக் கணக்கிட உதவும் எண்ணல் என்ற அமைப்பு. இதை வரைபடம் மூலம் காணும் வசதி (Marking Index).
- முகவரிகளை அச்சடிக்க உதவும் "வில்லை" (Label).
- ஒரே தகவலை பல்வேறு முகவரிகளுக்கு அனுப்புவதற்கு வசதியாக "அஞ்சலிணை" (Mailmerge).
- ஒரே கோப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட கோப்பை இணைக்க உதவும் ஆவண இணைப்பு (Merge Document). இப்படிப் பலப் பல.

சென்னைக்கவிகள்- காலத்தை வென்ற புதையலாகத் தந்திருக்கும் குறளமுது - கற்றோரும் மற்றோரும் கேட்டு, பார்த்து மகிழ வேண்டிய குறள் விளக்கமாகும். இந்த சீடியின் உள்ளடக்கங்கள்.

- 1330 குறள்கள் - ஒலியோடு, ஒளியோடு.

- தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு, மலாய் மொழியில் உரைகள்.
- தமிழில் - பரிமேலழகர் உரை, மு.வ உரை, பதின் கவனர் உரை, வெற்றி ஒரு வரி உரை.
- திருக்குறள் தொடர்பாக வந்த நூல்கள் - நூல்வடிவிலேயே புத்தகத்தைப் புரட்டி ஒய்வாக



படிக்கலாம்.

அந்நூல்களில் சில:


- திருக்குறளும் சமயச் சார்பின்மையும்
- திருக்குறளும் அரசியலும்
- திருவள்ளுவர் ஓர் மருத்துவர்
- திருக்குறளும் சுற்றுச் சூழல் பாதுகாப்பும்
- திருக்குறளும் எயிட்சும்
- திருக்குறளும் நுகர்வோர் பாதுகாப்பும்
- சில அரிய சொற்களுக்கு படக் காட்சி விளக்கம்

மொத்தத்தில் ஒரு குட்டி நூலகமே இந்த சீடியில் அடக்கம்.

இதைப்பார்த்து, சென்னைக் கவிகள் தந்த இன்னுமோர் பரிசு தான் "அறிவோடு விளையாடு". இந்த சீடியில் வல்லாரை, சிதறல், கொமுக்கு, டிக்டாக்டோ, கபாலி, கோடீஸ்வரன் என ஆறு விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. சிந்தனையைச் சீரமைக்க, ஞாபக சக்தியைப் பெருக்க, போராடும் குணம் படைக்க, பொது அறிவை வளர்க்க, கவலையை மறக்க என இந்த விளையாட்டுக்கள சிறியோர், பெரியோர் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் உதவும்.

இம்மென்பொருள்களின் வரவு தமிழ்பேசும் சமூகத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

# கேள்வி - பதில்கள்



**வெப் தளங்களை படங்கள் இல்லாது ரெக்ஸ்ட்டாக மட்டும் தோன்றச் செய்யலாம் என்கிறார்களே! அது எப்படி?**

**- ஆ. மார்க்கண்டு, மன்னார்.**

படங்களுடன் வெப்தளம் டவுண்லோட்டாக அதிக நேரம் எடுக்கு மென்பதால் படங்கள் இல்லாத ரெக்ஸ்ட்டை மட்டும் தோன்றச் செய்யமுடியும். நீங்கள் எந்த பிறவுஸரைப் பயன்படுத்துகிறீர்கள் என்று குறிப்பிடவில்லை. எனவே, இரு பிறவுஸர்களிலும் இதை எப்படிச் செய்ய முடியும் என்பதை இதில் குறிப்பிடுகின்றோம்.

நெட்ஸ்கேப் நெவிகேட்டர் பிறவுஸர் எனில் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

மெயின் மெனு எடிட் (Edit) ஊடாக பிறிஃபரன்ஸ் (Preference) ஐக் கிளிக் செய்யுங்கள்.

வரும் டயலொக் பொக்ஸில் அட்வான்ஸ்ட் (Advanced) பட்டினைக் கிளிக் செய்யுங்கள். பின் ஓட்டோமட்டிக்கலி லோர்ட் இமேஜஸ் (Automatically load images) என்பதன் அருகில் காணப்படும் செக் மார்க்கை எடுத்து விடுங்கள்.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் எனின், மெயின் மெனு ரூல்ஸ் (Tools) ஊடாக இன்டர்நெட் ஒப்ஷன்ஸ் (Internet options) ஐக் கிளிக் செய்யுங்கள். வரும் டயலொக் பொக்ஸில் அட்வான்ஸ்ட் (Advanced) என்ற பட்டினைக் கிளிக் செய்யுங்கள். அதில் மல்ரிமீடியா (Multimedia) என்ற பகுதிக்கு ஸ்குரோல் செய்து அதில் ஷோ பிக்ஷர்ஸ் (Show Pictures) என் பதன் அருகிலுள்ள செக் மார்க்கை எடுத்து விடுங்கள்.

**ஃப்ளோப்பி டிஸ்க்கில் ஃபைல் ஒன்றை சேவ் (Save) செய்வதற்காக சேவ் அஸ் (Save As) கட்டளையைக் கொடுத்த போது "A:\ is not accessible" என்ற செய்தி வருகிறதே. ஏன்?**

**- ஏ. நுஃமான், பேருவளை.**

ஃபிளோப்பி ட்ரைவ் (Floppy Drive) இல் ஃபிளோப்பி டிஸ்க் இல்லாமல் இருந்தால், அல்லது சரியாக உட்செலுத்தப்படாது இருந்தால், அல்லது அதிலுள்ள டேற்றா செக்டர் (Data Sector) கள் பழுதடைந்து இருந்தால் இந்த எரர் மெசேஜ் (Error Message) வரலாம். சில சந்தர்ப்பங்களில் ஹார்ட் டிஸ்க்கில் சேவ் செய்ய முற்படும் போதும் இந்த எரர் மெசேஜ் (Error Message) வரலாம். வழமையாக இன்டர்நெட்டில் உங்களுக்கு வந்த இ-மெயில்களை ஃபிளோப்பி டிஸ்க்கிலேயே சேவ் செய்து வந்திருப்பீர்கள். ஆனால், வழமைக்கு மாறாக ஹார்ட் டிஸ்க்கில் சேவ் செய்யும் நோக்கத்தில் சேவ் அஸ் (Save As) கட்டளையைக் கொடுக்கும் போது, அது ஃபிளோப்பி ட்ரைவில், ஃபிளோப்பி டிஸ்க் உள்ளதா எனத்தேடிப் பார்க்கும். அதன்போது ஃபிளோப்பி டிஸ்க் இல்லாது விட்டாலும் மேற்கூறிய எரர் மெசேஜ் வரும். அவ்வேளையில் கான்சல் (Cancel) பட்டினைக் கிளிக் செய்து விட்டு சேவ் செய்ய முடியும்.

**எச்ரீஎம்எல் (HTML) இல் பயன்படுத்தப்படும் குறிப்புக்களில் <EMBED> என்பது எதற்காகப் பயன்படுகின்றது?**

**- உ. ஆதவன், கனடா.**

நெட்ஸ்கேப் நெவிகேட்டர் (Netscape Navigator) பிறவுஸரில் ஒலி (Sound) க்கான ஃபைலை செயற்படுத்துவதற்காக இக்குறிப்பு பயன்படுகிறது. இதை <EMBED SRC="Voice.wav"> எனக் கொடுக்க வேண்டும். இங்கு Voice.wav என்பது ஃபைலின் பெயராகும்.

**வாசகர்களே!**

**உங்கள் கம்பியூட்டர் தொடர்பான கேள்விகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.**

இச்சஞ்சிகை 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி 417/2, காலி வீதி, கொழும்பு - 03 இலுள்ள மிலேனியம் அட்வடைசிங் அன்ட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# Computer Courses

மேலதிக கட்டணத்துடன் UK சான்றிதழ்களும் உண்டு.

விசேட கழிவு
Rs.1000/=

அடிப்படையிலிருந்து ஆரம்பம்...
O/L, A/L மாணவர்களுக்காக விஷேடமாக வடிவமைக்கப்பட்டது.

**DIPLOMA IN COMPUTER STUDIES** — 4 Months

Introduction to Computers, Microsoft Windows, Ms-Dos, Ms-Word, Ms-Excel, Ms-Powerpoint, Ms-Access, Visual Basic, HTML & Internet.

Usual Fees : 5000/=

WEB பக்கங்களை உருவாக்குவதற்கு

**Diploma In Web Designing**

Usual Fees :4000/= — 3 Months

அடிப்படையிலிருந்து ஆரம்பம்...
காரியாலயங்களில் வேலை செய்வோர்க்கானது..

**DIPLOMA IN MICROSOFT OFFICE**

Usual Fees :3500/= — 3 Months

INTERNET துறையில் தேர்ச்சிபெறுவதற்கு.

**Diploma In e-Commerce** — 5 Months

SYLLABUS:
INTERNET TECHNOLOGY, HTML PROGRAMMING, VB SCRIPT, JAVA SCRIPT, WEB PUBLISHING, FRONT PAGE, ASP, DHTML, XML & PROJECT REPORT, INTRODUCTION TO FLASH

Usual Fees :6000/=

கணினி எழுத்தமைப்பு மற்றும் விளம்பரங்கள்
வடிவமைத்தல் போன்ற துறைசார்ந்தோருக்கு.

**Diploma In Desktop Publishing**

Pagemaker
Corel Draw
Photoshop

Usual Fees :3500/= — 3 Months

**Individual/Short term Courses!!**

JAVA - Rs. 4500/=
ORACLE 8i - Rs. 4500/=
INTERNET - Rs. 2000/=
VISUAL BASIC - Rs. 4000/=

விண்ணப்ப முடிவுத் திகதி : 15-10-2001

மேலதிக விபரங்களுக்கு...

CBS

**Head Office**
No: 83-2/2, 2nd Floor, Galle Road, Colombo -06
Tel: 074-517757 (வெள்ளவத்தை பள்ளிவாசல் எதிரில்)

Call for the timetable

கீழ் காணும் விண்ணப்பத்தை
பூர்த்தி செய்து, பாடக்கட்டணத்திலிருந்து
ரூ.1000/= கழிவை பெற்றுக்கொள்ளுங்கள்

---

Special Discount Voucher

Save Rs.1000/=
Before 15-10-2001

NAME : ............................................
ADDRESS : ............................................
............................................
TELEPHONE NO : ............................
DATE OF BIRTH : ............................
Gender : ...................... (M/F)
COURSE NAME : ............................
MEDIUM : ............................
Suitable Time : ............................

---

நம்ப முடியாத கட்டணத்தில் வெளிநாட்டுப்பயணம்...

## வெளிநாட்டில் உயர்கல்வி கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

LONDON - AUSTRALIA - CANADA - SWITZERLAND - RUSSIA - CYPRUS

அடிப்படை கல்வி தகைமைகள்
G.C.E.(O/L) or G.C.E. (A/L)

ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில், உயர் கல்லூரிகளில்
கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்குத் தேவையான ஆலோசனையுடன்
கூடிய VISA உதவிகள் செய்து தரப்படும்.
ஆங்கில அறிவு குறைந்த மாணவர்களுக்கு விஷேட கவனம் செலுத்தப்படும்

| HEAD OFFICE | PUTTALAM | PALAVI |
|---|---|---|
| No : 83- 2/2<br>Galle Road<br>Colombo -06<br>Tel : 074 - 517757 | 40, Masjid Road,<br>Puttalam<br>Tel : 032 - 65689 | 47, Colombo Rd,<br>Palavi.<br>Tel : 078 - 905756 |

# Planning to migrate Canada / Japan

*learn French in 6 months and gain more points at the interviews
*learn Japaneese in 6 months all 3 alpherbats by Awardwinning Lectures

## TOEFL

Fully Airconditioned Environment
Students are restricted to 10

*Use of Original latest cassettes and lessons on CD's
*Regular Handouts based on the latest materials
*More enough exercises in listening comprehension and structure
*Hands on training in our modern computer Lab for Answering TOEFL

## A/L English for A/L Students
## SPOKEN ENGLISH

For Elders, school Leavers & jop Seekers

*Qualified and Experienced Teachers
*Fully Equipped and Air Conditioned Class Rooms
*Computer Assisted Language Learning Facilities

**EXPRESS STREAM 1 MONTH ONLY**

SOFTWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTER STUDIES
GRAPHIC DESIGNING
JAVA , C++ / OOP
ORACLE & I
VB 6.0 & SQL SERVER 2000
AUTO CAD 2000
WEB DESIGNING
MS OFFICE 2000
MILLENNIUM KIDS

**FREE E-mail & Internet Training**

For Further Details Contact :

RETINA INSTITUTE OF BUSINESS STUDIES

RIBS

2-1/2, EDWARD LANE , COLOMBO -03 TEL : 507781, 507782
FAX : 507781 E.mail : study@retina.lk

Designed By L.M.Faizal